# கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்

## FOLK SONGS OF THE MUSLIM EAST LANKA



தொகுப்பாசிரியர் :
அல்-ஹாஜ். எம். வை. உதுமான் ஸாஹிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை
# முஸ்லிம் கிராமியக் கவிகள்

(FOLK SONGS OF THE MUSLIMS OF EAST LANKA)

PRADESHIYA SABHA
07 AUG 2007
AKKARAIPATTU

தொகுப்பு
அல்–ஹாஜ். எம். வை. உதுமான் ஸாஹிபு
[illegible]

வெளியீடு
முஹம்மது அப்ரார் வெளியீட்டகம்
41, மஸ்ஜிதுல் றகுமான் வீதி,
அக்கரைப்பற்று - 06.
சிறி லங்கா.
0672277809

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்
## (FOLK SONGS OF THE MUSLIMS OF EAST LANKA)


| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | : | அல்-ஹாஜ். எம். வை. உதுமான் ஸாஹிபு<br>ஓய்வு பெற்ற அதிபர்<br>அக்கரைப்பற்று - 06. |
| பதிப்புரிமை | : | தொகுப்பாசிரியருக்கே |
| வெளியீடு | : | முஹம்மது அப்ரார் வெளியீட்டகம்<br>41, மஸ்ஜிதுர் றகுமான் வீதி,<br>அக்கரைப்பற்று - 06.<br>067 22 77809 |
| முதற்பதிப்பு | | 2006 |
| அச்சகம் | | ஸ்டார் ஒப்செற் பிரிண்டர்ஸ்<br>502, பிரதான சாலை<br>சாய்ந்தமருது - 14.<br>067 22 29414 |
| அட்டைப் படம் | : | ஜனாப். எஸ். ஐ. எம். யஷீம்யா |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 168 |
| விலை | : | 200/= |


### சமர்ப்பணம்

என்னைப் பெற்று வளர்த்து கல்வியூட்டிய எனது தந்தை 'சீமான்' எனும் செல்லப் பெயரில் சிறப்புடன் வாழ்ந்து மறைந்த மர்ஹூம் அல்-ஹாஜ். மு. கா. முஹம்மது யூசுப் அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | மதிப்புரை | 05 |
| 02. | என்னுரை | 08 |
| 3. | இதன் வரலாறு | 10 |
| 04. | இறைவணக்கம் | 17 |
| 05. | வாழ்த்துக்கள் | 19 |
| 06. | ஊர்பற்றிய பாடல்கள் | 23 |
| 07. | வேளாண்மை பற்றிய கவிகள் | 27 |
| 08. | கிண்டல் கவிகள் | 29 |
| 09. | மழைக் காவியம் | 32 |
| 10. | கல்விக்காக தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற மகனை எண்ணிப் பாடியது | 37 |
| 11. | மாமிக்கு மருமகள் பாடிய கவிகள் | 52 |
| 12. | மதினிக்காகப் பாடியது | 59 |
| 13. | ஆணும் பெண்ணும் பாடியவை ஆண் + பெண் - I | 66 |
| 14. | ஆண் + பெண் - II | 68 |
| 15. | ஆண் + பெண் - III | 73 |
| 16. | ஆண் + பெண் - IV | 80 |
| 17. | ஆண் + பெண் - V | 86 |
| 18. | ஆண் + பெண் - VI | 93 |
| 19. | ஆண் + பெண் - VII | 101 |
| 20. | ஆண் + பெண் - VIII | 102 |
| 21. | காசிம் + கதீஜா காவியத் தொடர் | 105 |
| 22. | இஸ்லாமிய தமிழ் இலக்கியம் | 155 |
| 23. | தனிப்பாடல்கள் | 159 |
| 24. | தாலாட்டுப் பாடல்கள் | 161 |
| 25. | தென்கிழக்குப் பகுதிகளில் பேசப்படும் மரபுச் சொற்கள் | 163 |




# மதிப்புரை

வாய்மொழி இலக்கியத்தில் கிழக்கிலங்கை முக்கியத்துவம் பெறுகின்ற பிரதேசமாகும். இப்பிரதேச மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு இவ்விலக்கியம் பெரிதும் உதவும். அந்தவகையில் அக்கரைப்பற்று உதுமான் ஸாஹிப் அவர்களின் இத்தொகுப்பு முயற்சி கூர்ந்து நோக்கத்தக்கது.

ஈழத்து வாய்மொழிப் பாடல்களை பலரும் பலவிதமாக தொகுத்துள்ளார்கள். 'மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்' என எஸ். விஸ்வநாதன் தொகுத்திருக்கின்றார். வித்துவான் வீ. சி. கந்தையா, எப். எக்ஸ். சி. நடராசா, கவிமணி மு. இராமலிங்கம், எம். ஸி. எம். சுபைர், ஆ. மு. ஷரிபுத்தீன், எஸ். முத்துமீரான் முதலானோர் வாய்மொழிப் பாடல்களை தொகுத்தும் - அவை பற்றிய விளக்கங்களையும் எழுதியுள்ளனர். அந்தவகையில் உதுமான் ஸாஹிப் அவர்களின் இத்தொகுப்பு முயற்சி வேறுபட்டதும் குறிப்பிடத்தக்கதாகவும் அமைந்துள்ளது.

பெரும்பாலான நாட்டார் பாடல் தொகுப்புக்களில் காதல் பாடல்களே மிஞ்சியிருப்பதோடு அவற்றிக்கான புனைக்கதைப் பாங்கான விளக்கங்களும் அமைந்துள்ளன. இந்தத் தன்மை நாட்டாரியல் ஆய்வின் யதார்த்தத்தை - அதன் பண்பாட்டு வெளிச்சம் காண்பதற்கான நோக்கை சிதைத்து விட்டது என்றே சொல்ல வேண்டும். இந்தத் தன்மையில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு தொகுப்பாகவே இத்தொகுப்பை அடையாளப்படுத்த முடியும்.

பேராசியர் எம். ஏ. நுஃமான் 'கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வுகள்' என்ற கட்டுரையில் குறிப்பிடும் கருத்தொன்று இவ்விடத்திற்கு முற்றிலும் பொருந்தும். கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வுக்கு முன் தேவையாக கிராமிய இலக்கியங்கள் உரிய முறையில் தொகுக்கப்பட வேண்டும். தமிழகத்திலும் இலங்கையிலும் கிராமிய இலக்கியத் தொகுப்பு முயற்சிகள் பல நடைபெற்றுள்ளன. ஆயினும் இத்தொகுப்புக்களில் ஒரு பொதுவான அடிப்படையான குறைபாடு காணப்படுகிறது. இத்தொகுப்புக்களில் கிராமிய இலக்கியம் இடம்பெறும் உண்மையான சமூக சந்தர்ப்பங்களும் கிராமிய மக்களின் உண்மையான மொழி வழக்குகளும் பெரும்பாலும் புறக்கணிக்கப் பட்டிருப்பதே இக்குறைபாடாகும். இக்குறைபாட்டில் இருந்து விலகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொகுப்பாகவே உதுமான் ஸாஹிபின் இத்தொகுப்பு அமைந்துள்ளது. சமூக சந்தர்ப்பத்தையும் மொழி வழக்கையும் அவர் கவனமாக பதிவு செய்துள்ளார்.

கவி மரபு பற்றிக் கூற வந்த எஸ். வித்தியானந்தன் 'மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப் பாடல்களிற் பெரும்பாலானவை அகத்திணையைச் சார்ந்தனவே. எல்லோருடைய காதல் நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் காட்டும் இவ் அகத்திணைப் பாடல்கள் மட்டக்களப்பில் 'கவிகள்' என வழங்கப்படுகின்றன. பாடல் அனைத்தையும் குறிக்கும் 'கவி' என்னும் சொல் மட்டக்களப்பிலே அகத்திணை நாட்டுப்பாடல்களைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாக வழங்குகின்றது. இக்கவிகளில் அதிகம் ஈடுபாடுடையவர் மட்டக்களப்பு இஸ்லாமிய மக்களே' என விளக்குகிறார். இதே கருத்தையே வீ. சி. கந்தையாவும் குறிப்பிடுகிறார். அவ்வாறன்றி இறை வணக்கம், வாழ்த்துக்கள், ஊர்பற்றியன, கிண்டல் கவிகள், தொழிற்பாடல்கள், கடித இலக்கியம் (தூது) என்று பலவகைப்பட்டவையாக நமது வாய்மொழிப் பாடல்கள் அமைந்திருப்பதற்கு இந்நூல் பெரிதும் சான்றாகின்றது.

குறிப்பாக காதல் கவிகளுக்கு நமது பெரும்பாலான தொகுப்பாளர்கள் - அவை உண்மையில் ஆண் அல்லது பெண்ணால் பாடப்பட்டனவாகவும் அதற்கான ரசனைப்பாங்கான விளக்கமளிப்பதாகவும் காட்டிய கற்பித்தலுக்கு அப்பாலே இவை பாவனையாகவும் மிகச்சில நேரடியாக ஆண் - பெண்ணால் பாடப்பட்ட தற்குமான அத்தாட்சியையும் இத்தொகுப்பு வழங்குவது குறிப்பிடத்தக்கது. ஆகவே, நமது வாய்மொழி இலக்கியம் பற்றிய ஆய்வுகளை இன்னுமொரு கட்டத்துக்கு நகர்த்த இத்தொகுப்பு பெரிதும் உதவும்.

நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஐந்து முக்கியமான பண்புகள்- சிறப்பியல்புகள் இருப்பதாக ஜோன் ஹெரால்ட் குறிப்பிடுகின்றார்.

01. நாட்டுப்புற இலக்கியங்கள் எனப்படுவது வாய்மொழியால் பரவுவது
02. மரவு வழிப்பட்டது
03. பல்வேறு வசையாகத் திரிந்து வழங்குவது
04. ஆசிரியர் இல்லாமை
05. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கும்



இந்தப் பண்பு நிலைகளை பெரிதும் உள்ளடக்கியிருப்பதாக இத்தொகுதி யில் உள்ள பாடல்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இளம் ஆய்வாளர்களுக்கு இந்நூலில் பல தடயங்கள் உள்ளன. இத்தனைக்கும் வழி சமைத்த இத்தொகுப்பாளர் நமது பாராட்டுக்குப் பெரிதும் உரியவர்.

இத்தொகுப்பு மூலம் பல விடயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. புதிய பல பாடல்கள் பதிவாகியுள்ளன. 1958 - 1959களில் வானொலி கிராமிய சஞ்சிகையில் ஒலிபரப்பான சில அங்கங்களும் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. நாற்பதாண்டு காலமாக இவ் ஆசிரியர் தேடிப் பெற்ற பாடல்கள் நமக்கு தொகுப்பாகக் கிடைத்திருப்பது பெரும் வரப்பிரசாதமே.

"நாட்டார் பாடல்களின் உள்ளடக்கம் பற்றி சுருக்கமாகக் கூற வேண்டுமாயின் அவையும் ஏனைய கலைப் படைப்புக்களைப் போலவே கூடுதலான சுதந்திரத்தையும் இன்பத்தையும் ஒளியையும் அவாவி நின்ற உள்ளங்களில் அமிழ்ந்திருந்த ஆசைகளை வெளியிடுவன எனலாம்" என பேராசிரியர் சி. தில்லைநாதன் குறிப்பிடுவதுபோல் மட்டுமன்றி நமது மொழி, பண்பாடு, மத நம்பிக்கை, வரலாற்றம்சங்கள் முதலானவற்றை தெளிவுபடுத்தும் மிகச் சிறந்த தொடர்புச் சாதனமாகவும் எம். வை. உதுமான் ஸாஹிபுவின் இத்தொகுப்பில் அமைந்துள்ள பாடல்கள் அமைந்துள்ளன. இத்தொகுப்பாசிரியர் கூறுவதுபோலவே "நம்மூதாதையரின் பூர்வீகச் சொத்தான இக்கவிதைத் தொகுதியை வெளியிடுவது என் தாயகத்திற்கு செய்யும் பணியாகவே கருதுகின்றேன்". எமது சமூக இருப்புக்கு இந்த ஆவணம் பெரிதும் உதவும்.

**றமீஸ் அப்துல்லா**
மொழித்துறை
தென்கிழக்கு பல்கலைக்கழகம்
ஒலுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக்கவிதை அரும்பெரும் பொக்கிசமாகும். இக்கவிதைகளைத் தேடி எடுத்து தொகுப்பாக வெளியிட வேண்டும். இலைமறை காயாகயிருக்கும் இக்கவியமுதை இலங்கை வாழ் ஏனைய மக்களும் படித்தின்புற வேண்டும் என பல்வேறு துறைகளிலும் உள்ள கவிதைகளையும் ஒன்று சேர்த்து அச்சேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடிப்பு நான் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்த காலத்தில் என் மனதில் ஏற்பட்ட அவாவினால் பலரிடம் வாய் மூலமாகவும் எழுத்திலுமிருந்த பல கவிதைகளை சேகரித்துக் கொண்டேன். எனினும் இதனை நூலாக்க முடியவில்லை. இதன் இடையே பல இடர் பாடுகளும் ஏற்பட்டன. இதில் 1957ஆம் ஆண்டு கிழக்கிலங்கையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் பல கவிதைத் தொகுப்புக்கள் அழிந்துவிட்டன. அதோடு எனது உத்தியோக இடமாற்றங்களும் பெரும் தடையாக அமைந்து விட்டது. இதற்கிடையே இக்கவிதைத் தொகுப்பில் 13 அதிகாரங்களைக்கொண்ட ஒரு பகுதி இலங்கை வானொலியில் கிராமிய சஞ்சிகை எனும் நிகழ்சியில் ஒரு அங்கமாக ஒலிபரப்பப்பட்டது. அதற்கு அன்றைய தமிழ் பிரிவுக்கு அதிபராக இருந்த திரு. நடராசா அவர்களுக்கும் நிகழ்ச்சிக்குப் பொறுப்பாளராக இருந்த திரு. விவியன் நமசிவாயம் அவர்களுக்கும் நன்றியுடையவனாவேன். இந்த நிகழ்ச்சி முழுவதும் இசைத் தட்டு மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்டதோடு பலமுறை ஒலிபரப்பப்பட்டது. அது இப்போதும் களஞ்சியசாலையில் இருக்குமென எண்ணுகின்றேன்.

எனவே, நம் மூதாதையரின் பூர்வீகச் சொத்தான இக்கவிதையை வெளியிடுவது என் தாயகத்திற்குச் செய்யும் பணியாகவே கருதுகின்றேன். இடைப்பட்ட காலத்தில் பல நாட்டுப்பாடல், நாட்டார் பாடல், கவிதைகள் எனப்பல தொகுப்புக்கள் வெளிவந்தமை பாராட்டுக்குரியது. எனினும் எனது இக்கவிதைத் தொகுப்பை வெளியிட வேண்டியுள்ளது என்பதனை இதனைப் படிப்பவர்கள் அறிவார்கள். என்னைப்போல் இதற்கு முன்பு கிராமியக் கவிதைகளை அச்சேற்றியமைக்கு நன்றி. இதைவிட இன்னும் சில எழுத்தாளர்கள் வார, மாத பத்திரிகைகளில் இடைக்கிடையே எழுதி வந்தமைக்கும் நன்றியும் பாராட்டுகளும். இவ்வேளை ஒரு சிலர் சில கவிதைகளை நண்பர்கள் மூலமும் பிற வசதிகளைக்கொண்டும் பெற்றுக்



கொண்ட கவிதைகளை தமது எண்ணம்போல் கற்பனை செய்து எழுதி வந்தார்கள். இது வேதனைக்குரியது. இக்கவிதைகள் யாரால், ஏன், எப்போது பாடப்பட்டன என்பதை உணராமல் கண்டியில் அல்லது கொழும்பில் இருந்துகொண்டு மட்டக்களப்பைப் பற்றியும் அதன் சுற்றுப் புறத்தையும் கற்பனை பண்ணுவது வேடிக்கையாக இருக்கிறது. அத்தோடு மட்டக்களப்பு முஸ்லிம் பிரதேசங்களுக்கு வராத தெரியாத மக்களிடையே தப்பான எண்ணத்தை ஏற்படுத்திவிடுவதுமல்லாமல் இப்பிரதேச மக்களின் மனதை புண்படுத்திவிடும்.

எனவேதான், இத்தகைய எண்ணங்களையும் தப்பபிப்பிராயங்களையும் நீக்குவதற்காக பல துறைசார்ந்த கவிதைகளையும் வெளியிட வேண்டும் என்பதற்காக சுமார் 40 வருட முயற்சி இப்போது நிறைவடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரியட்டும்.

**அல்-ஹாஜ். எம். வை. உதுமான் ஸாஹிப்**
ஓய்வுபெற்ற அதிபர்
அக்கரைப்பற்று - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதன் வரலாறு

இயற்கை எழில்கொண்ட ஈழவள நாட்டிலே கிராமியக் கவிக்குப் பெயர் பெற்றது கிழக்கிலங்கையிலுள்ள மட்டக்களப்புப் பகுதி என்றால் மிகையாகாது. அதிலும் சிறப்பைப் பெறுபவர் இங்கு வாழும் முஸ்லிம்கள் என்பது மிகவும் பொருத்தமானது. நீண்ட காலமாக இங்குள்ள முஸ்லிம்கள் தமிழரோடு வாழ்ந்து தமிழையே தாய்மொழியாகப் பேசி, தமிழர்களின் கலை, கலாசாரத்தில் இரண்டறக்கலந்துள்ளனர். இதனால் இவர்கள் இலங்கையில் வாழும் ஏனைய முஸ்லிம்களைவிடக் கலப்பற்ற தமிழை தெளிவாகப் பேசுவதுடன் தமிழில் நல்ல தேர்ச்சியினையும் பெற்றவர்களாக வாழ்கின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக இவர்களிடம் காணப்படும் கவிப்புலமை ஒன்றே போதுமானது.

முக்காலத்தில் எழுத்தறிவு அற்றவர்களான, எந்தப் பாடசாலைக்கும் சென்றிராத இயற்கைப் புலமை பெற்ற இவர்கள் இவர்கள் தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு உடனுக்குடன் இன்சுவைக் கவிகளை இயற்றிவிடுவார்கள். இவ்வாறு பல ஆயிரக்கணக்கான கவிகளைப் படைத்துள்ளார்கள். இவற்றுள் பல இன்னும் வாய் வழியாகவே வந்துகொண்டிருக்கின்றன. பெரும்பாலான கவிஞர்களின் கவிதைகள் அவர்கள் மரணித்ததும் அழிந்துவிட்டன. தற்காலத்தில் சில கவிதைகள் பத்திரிகை வாயிலாகவும் புத்தக வடிவிலும் வெளிவந்துள்ளன. சில காலத்திற்கு முன் சில காவியங்கள் துண்டுப் பிரசுரமாக வெளிவந்தன. அதில் இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது ஜப்பான் விமானப்படை விமானங்கள் திருகோணமலை மற்றும் கிழக்குக் கரையோரக் கடலில் மேற்கு நாட்டுக் கப்பல்களைத தாக்கி அழித்ததை பின்னணியாகக்கொண்டு 'ஜப்பான் சண்டை'' என்னும் காவியமும் அதன் பின்பு, கல்லோயா அணைக்கட்டையும் அதன் ஆரம்பத்தில் மரம் பிடுங்குதல், காடழித்தல், மண்தோண்டுதல் போன்ற வேலைகளுக்குப் பெரும் இராட்சத இயந்திரங்கள் வேலை செய்தன. பல ஆயிரம்பேர் செய்ய வேண்டிய வேலைகளை சில நாட்களில் செய்தமை பெரும் வேடிக்கையாக இருக்கவே இவற்றைக் கண்ணுற்ற இப்பகுதியைச் சேர்ந்த ஒரு கவிஞர் 'கல்லோயாக் காவியம்' என காவியமாகப் படைத்தார். இதுபோன்று 1957ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தை இலக்காகக் கொண்டு படைக்கப்பட்டது 'வெள்ள அழிவுக் காவியம்'. இவையெல்லாம் துண்டுப் பிரசுரமாகவே வெளிவந்தன.



இதுமட்டுமன்றி இப்பகுதியில் பருவ மழை பொழிந்த வரலாறுமுண்டு. இது மழைக் காவியம். பொல்லடி பாடல் விருத்தங்கள் எனப் பல காவியங்களும் கவிதைகளும் படைக்கப் பட்டாலும் இவை வாய்வழிப் பாடலாக வழங்கப்பட்டன. அச்சேறுவது குறைவாகவே காணப்பட்டன. தற்போதுள்ளதுபோல் அச்சகங்கள், ஒலிப்பதிவு வசதிகள் அப்பொழுதில்லாமலிருந்தமையால் அநேகமான ஆக்கங்கள் அழிந்துவிட்டன. எழுத்தறிவற்ற கவிஞர்கள் பலரும் தாம் பாடும் கவிதைகளை எழுதத் தெரிந்தவர்களைக்கொண்டு எழுதி வைத்ததும் உண்டு. கவிஞர்கள் மறைந்தாலும் அவர்கள் பாடிய பாடல்கள், கவிகள் வாய்வழிப்பாடலாக அவரவர் சந்ததியினர் மூலம் அறியக்கூடியதாகவும் இருக்கின்றன. இதனைப்போன்று மற்றொருவிடயம் - கிழக்கு மாகாணத்தில் பிரபல்யமாக விளங்கிய விஷவைத்தியம். முறிவு வைத்தியம் போன்றவைகள் பாடல் மூலமாகவே வைத்திய சிகிச்சையும் அதன் குணம் குறிகளும் அறிவுறுத்தப்பட்டன. அவையும் அழிந்துபோன நிலையில் உள்ளது கவலைக்குரிய விடயமே.

## கவிப்போர்

மட்டக்களப்பு முஸ்லிம்கள் நோன்புப்பெருநாள், ஹஜ்ஜுப்பெருநாள், மீலாது தினம் போன்ற தினங்களில் மெத்தை வீடு என்னும் வீட்டைத் தயாரிப்பர். இது தோற்றத்தில் மேடையைப் போன்று இருக்கும். மேலே குடைபோல் எண்கோண மண்டபத்தைப் போன்றும் கீழே தென்னை மரக்குற்றிகளையும் அதன் மேலே பலகை, மூங்கில் முதலியவற்றால் மேடை செய்யப்பட்டு கண்ணாடி, நிறக்கடதாசி மற்றும் பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இத்தகைய வீடு மட்டக்களப்பு தென்பகுதி முஸ்லிம் கிராமங்களில் காணக்கூடியதாக இருந்தது. இம்மேடையில்தான் கவியரங்குகள் நடைபெறும். அக்காலத்தில் சினிமாக் கொட்டகைகளோ, காட்சிகளோ இல்லாத காலமது. இதனால் இக்கிராமங்களில் கவியரங்குகள் பிரபல்யம் பெற்றிருந்தன. இக்கவியரங்குகளில் பல ஊர் கவிஞர்களை ஒரே மேடையில் ஒன்று சேர்த்து போட்டிக்குக் கவி பாட வைப்பார்கள். இக்கவிப்போட்டியில் கவி பாடும் கவிஞர்கள் உடனுக்குடன் கவிகளை இயற்றி தமது கவி வல்லமையை கவிகள் மூலம் வெளிப்படுத்துவார்கள். இப்போட்டி கடும் போட்டியாக ஆளுக்கு ஆள் வசைக்கவிகளையும் பாடுவார்கள். போட்டி முற்றி கைகலப்புகள் உண்டாகாமல் இருபக்கமும் கவிஞர்களின் இடைநடுவே பலர் நடுவர்களாக அமர்ந்துகொள்வார்கள். இது மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாரஷ்யமாகவும் இருக்கும். இக்கவி நிகழ்வுகளை கண்டு இரசிப்பதற்கு பல ஊர்களில் இருந்தும் அதிகமான மக்கள் திரண்டிருப்பர். ஒரு விஷேட அம்சம் என்னவெனில் இப்போதுபோல் எதற்கென்றாலும் பொலிஸ் பாதுகாப்புக் கொடுப்பது அக்காலத்தில் இல்லை. பெருமளவில் பொதுமக்கள் கூடினாலும் எதுவித அசம்பாவிதங் களும் ஏற்படாமல் ஊர் மக்களே அமைதியை பாதுகாத்தனர். இக்கவிப்போட்டிகள் பெரும்பாலும் இராக்காலங்களில் நடைபெற்றாலும் பொழுது விடிந்தும் கவிப்போர் முடியாமலிருக்கும். இது தொடர்ந்தும் மறுநாளும் நடைபெறுவதுமுண்டு. இறுதியில் வெற்றிபெறும் கவிஞரை அவ்வூர் மக்களும் மற்றோரும் வாழ்த்தியும் பட்டுச்சால்வை போத்தி சன்மானம் வழங்கி மரியாதை செய்தும் வழியனுப்பி வைப்பார்கள். இது சங்க காலத்து நடைமுறை போன்று இம்மக்களின் கவி வளர்க்கும் தன்மை பாராட்டத்தக்கதே. இத்தகைய நிகழ்வுகள் ஆண்டுக்கொருமுறை நடைபெற்றதை எனது சிறு வயதில் கண்டு அனுபவித்ததுண்டு. இதில் சம்பந்தப்பட்டவர்கள் ஒரு சிலர் இன்னும் உயிருடன் இருக்கின்றார்கள். சமீபகாலமாக இத்தகைய முயற்சிகள் ஏதும் நடைபெறவில்லை.

மட்டக்களப்பு தென்பகுதி முஸ்லிம்களிடயே இக்காவிய அரங்கைப்போலவே வேறுபல காவிய அரங்குகளையும் காணலாம். அவற்றில் 'ஊஞ்சல் காவியம்' - இதில் தொட்டில் ஊஞ்சல் - இது தற்போதைய 'காணிவல்' களில் இடம்பெறும் 'மெரிக்கோரவுண்ட்' என்பதைப் போன்றது- இதோடு தொங்கு ஊஞ்சல், கிறுக்கு ஊஞ்சல் எனப் பலவகை ஊஞ்சல்கள் போடப்பட்டிருக்கும். கிராமத்தில் இருக்கும் சிறுவர் முதல் வாலிபர்கள், வயதானவர்கள் அனைவரும் பங்கு பற்றுவர். இது பார்ப்போரை பரவச மூட்டக் கூடிய நிகழ்வுகளாக இருக்கும். விஷேடமாக வாலிபர்கள் ஊஞ்சலாடும் பொழுது பல கவிதைகளையும் விருத்தங்களையும் கவிகளையும் பாடி மகிழ்வர். அதிலும் குறிப்பாக இளம் வாலிபர்கள் இனிய குரலில் பாடும்பொழுது அக்கம்பக்கமெல்லாம் இளம்பெண்களும் வீட்டு வேலிகளுக்கு மறைவில் நின்று கவிதைகளைக் கேட்டின்புறுவர். இதிலும் ஒருவருக்கொருவர் போட்டியாக கவி பாடுவர்கள். சிறப்பாகப் பாடுபவர்களுக்கு புதுச்சாறம், பட்டுச்சால்வை போத்திவிடுவார்கள். இவ்வாறு ஊஞ்சலில் பாடும் கவிகள் வேடிக்கையாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கும். இதற்கென்றே ஊஞ்சல் காவியங்களையும் உடனுக்குடன் இயற்றிப் பாடும் வல்லமையையும் காணலாம்.



இங்கு பாலன் முதல் பாட்டன் வரை பண்ணிசைக்கும் இக்கவிதைகள் கேட்போரின் இதயங்கவராமல் இருக்க முடியாது. தித்திக்கும் தேன்மதுரத் தமிழோசை திக்கெட்டும் கொட்டி முழங்கும் இத்தீந்தமிழ் நாட்டில் மக்கள் மட்டும்தான் கவி பாடுகிறார்களா? இல்லை நீரில் வாழும் நீரினங்களும் பாடுவதிலிருந்து இம்மக்களின் தீன் சுவைக் கவியை பார்க்குமிடமெல்லாம் பரந்து கிடக்கும் மட்டக்களப்பிலே எழிமையும் இனிமையும் கொண்டவை. இங்கு வழங்கிவரும் கிராமியக் கவிகளாம் பாலன் முதல் பாட்டன் வரை பண்ணிசைத்துப் பாடும் இக்கவிதைகள் கவியமுதாம் ஆழ்கடல் முத்துப் போன்றவை. எழிய நடையில் இனிமையை எடுத்தியம்பும் இக்கவிதைகள் பண்டிதரையும் மிஞ்சிக்கிடப்பதைக் காணலாம்.

இக்கவிதைகள் பெரும்பாலும் மட்டக்களப்பின் தென்பகுதிக் கிராமங்களான சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில், இறக்காமம் முதலிய ஊர்களில் செறிந்து கிடப்பதைக் காணலாம். எல்லா இடங்களிலும் கவிதைகள் பரந்து காணப் பொதுவான சில கவிதைகள் எல்லா இடங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. நான் இங்கு எடுத்துக்கொண்ட கவிதைத்தொகுப்பும் மட்டக்களப்பு முஸ்லிம் கிராமங்கள் பலவற்றில் வழங்கப்பட்டும் வருகின்றது. பெரும்பாலான கவிதைகள் அந்த, அந்த ஊர்களிலுள்ள கவிஞர்களினால் சந்தர்ப்பத்துக் கேற்றவாறு பாடப்பட்டுள்ளன. அதோடு இங்கு வழங்கிவரும் கவிதைகள் தாமாக எழுந்தவையல்ல. கவிகள் அனைத்தும் சந்தர்ப்பதிற்கும் தேவைக்கும் ஏற்ப பாடப்பட்டிருப்பதையும் காணலாம்.

## வயல்களில்

மட்டக்களப்பு முஸ்லிம்களிடையே ஆண்கள் கடின உழைப்பாளிகள். நெற்செய்கைக்கான நிலமும் அதற்குத் தேவையான நீர்வளமும் இருப்பதால் தம் சூழலுக்கடிமையாகி பெரும்பாலோர் விவசாயத்தையே ஜீவனோபாயமாக்கிக் கொண்டனர். இதனால் இவர்கள் கஷ்டப்பட்டே உழைக்க வேண்டியுள்ளது. இத்தகைய கடின உழைப்பின்போது இடைக்கிடையே ஓய்வு எடுப்பர். அப்பொழுதெல்லாம் இவர்கள் வாயிலிருந்து இன்னிசைக் கவிதைகள் வெளிவரும். இராக்காலங்களில் வயல்களில் காட்டுமிருகங்கள் சேதப்படுத்திவிடாமல் காவல் இருப்பர். அதிலும் அதிகமாக இளம் வாலிபர்கள் காவலுக்குச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியாக இருக்காமல் சிலர் ஒன்று சேர்ந்து காவலிருப்பர். இதில் பளிங்குபோன்ற நிலவின் ஒளியும் தவழ்ந்துவரும் தென்றல் இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிவிடும். அப்பொழுதெல்லாம் தம்மையறியாமலேயே இன்னிசைக் கவிகதைகளைப் படைப்பர். அதிலும் காதலில் சிக்குண்டிருந்தால் தனக்கு வரும் கன்னியை எண்ணி அவளின் வண்ணவடிவத்தை பாட்டாகப் படிப்பர். இதைப்போலவே வீட்டில் கூண்டுக் கிளிகளாக அடைபட்டுக்கிடக்கும் கன்னிப்பெண்களும் தனக்கு வரப்போகும் கணவனை கட்டழகுக் காளையை எண்ணி இசைப்பர். இப்படி இருபாலாரும் கவி மூலம் தம்மனக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வர். இதைவிட மட்டக்களப்புப் பகுதியில் ஆண்கள் பகற்பொழுதில் வேலைக்குச் சென்றுவிட்டால் பெண்கள் வீட்டுவேலை முடிந்ததும் எஞ்சியுள்ள வேளைகளில் பாய் இழைத்தல், கிடுகு பின்னுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுவர். அப்பொழுதெல்லாம் களைப்பு நீங்க இன்னிசைக் கவிகளைப் பாடிப்பாடி வேலை செய்வார்கள்.

### அறுவடையில்

இங்கு விவசாயமே பிரதான தொழில். ஆதலால் அறுவடைக்காலம் மிகவும் உற்சாகமான காலம். இடைவிடா வேலையின்போது பகலில் மட்டுமன்றி இரவிலும்கூட வயல்களில் தங்கி இருந்து வேலைசெய்ய வேண்டியேற்படும். இவ்வாறு தங்கியிருக்கும் வேளைகளில் தூக்கம் வரும்வரை பல்வேறு பாட்டுக்களையும் கவிகளையும் பாடுவர். அறுவடையின்போது அலுப்புத் தட்டாமல் இருக்க கவி பாடிப்பாடி அறுவடை செய்வதுமுண்டு. இங்கு கணவன்மாரை இழந்த விதவைப் பெண்கள். வாழ்க்கைக்கு வசதி இல்லாத பெண்கள் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் ஊருக்கு அருகிலுள்ள விவசாய வயல்களுக்குச் சென்று கதிர் பொறுக்குதல், கதிரடித்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு தம் வாழ்க்கையை நடாத்துவதை இன்றும் காணலாம். இவ்வாறு செல்லும்போது தனித்தனியே செல்லாது பலர் சேர்ந்து கூட்டமாகச் செல்வர். இதில் ஒரு சில இளம்பெண்களும் செல்வதுண்டு. அப்பொழுதெல்லாம் கவிபாடிப்பாடி வேலை செய்வர். இதுபோன்று வயலில் களை எடுத்தல், நாற்று நடுதல் போன்ற வேலைகளிலும் இத்தகைய பெண்கள் கூட்டாகச் சென்று வேலை முடியும் பொழுதெல்லாம் கவி பாடிக்கொண்டிருப்பதைக் காணலாம்.



### கடலில் மீன் பிடித்தல்

அறுவடை முடிந்து ஆண்கள் வீட்டில் தங்கியிருக்கும் காலமெல்லாம் ஊரையண்டியுள்ள கடற்கரையில் மீன்பிடிப்பதில் ஈடுபடுவார்கள். மீன் பிடிப்பதற்கு இவர்கள் மொறட்டுவ. பேருவலை, மாத்தறை மற்றும் இலங்கையின் மேற்கு. தெற்குக் கரையிலுள்ள மீனவர் உபயோகிக்கும் கரைவலைகளை உபயோகிப்பர். இதில் பலர் சேர்ந்து கூட்டமாக வேலை செய்வர். ஒவ்வொரு குழுவிலும் முப்பது. நாற்பது பேர்வரை சேர்ந்திருப்பர். இவர்கள் கடலில் வலையை விரித்து இழுக்கும்பொழுது அலுப்புத் தட்டாமல் இருக்க இனிமையான பாட்டுக்களைப் பாடிப்பாடி வலையை இழுப்பார்கள். அதோடு பகலில் மீன் பிடித்து முடிந்ததும் தோணியையும் வலைகளையும் கடற்கரையில் வைத்துவிட்டு இராக்காலங்களில் குழுவில் இருவரைக் காவல் வைப்பார்கள். இதில் பெரும்பாலும் விவாகமாகாத இளம் வாலிபர்கள் சேர்ந்துகொண்டார்களென்றால், கண் விழிப்பதற்காக கவி படித்து நேரத்தைப் போக்குவர். இராக்காலங்களில் வீசும் கடற்காற்று தம்மில் பட்டதும் தம்மையறியாமலேயே இதய கீதம் பாட ஆரம்பித்து விடுவர். ஒருவர் ஆணாகவும் மற்றொருவர் பெண்ணாகவும் கற்பனை செய்து பாடுவது கேட்பதற்கு இனிமையைக் கொடுக்கும்.

### வண்டிக்காரர்கள்

இப்பகுதியில் மோட்டார் வாகனப் போக்குவரத்து இல்லாத காலமது. தூர இடங்களுக்கு நெல் ஏற்றிச் செல்லுதல், காட்டிலிருந்து விறகு வெட்டி வருதல் என்பவற்றுடன் (முப்பனை) பதியத்தலாவ, மொனறாகலை போன்ற பகுதிகளிலிருந்து வாழைக்காய், சோளம், பலாக்காய், மாங்காய் போன்ற பல உப-உணவுப் பொருட்களைப் பண்டமாற்றாக ஏற்றி, இறக்குவதற்கு இரட்டை மாட்டுவண்டிகளை (பதுளைக் கரத்தை) உபயோகித்தனர். நீண்ட தூரப்பிரயாணத்தின்போது இடைத்தங்கல் போட்டு பிரயாணத்தை முடிப்பர். இதில் பல வண்டிகள் தொடராக இரவிலும் பயணம் செல்வதுண்டு. அப்போது காட்டுவழி என்பதால் பாட்டுக்கள் பாடிப்பாடி செல்வர். ஒவ்வொரு வண்டியும் தொடராக வரும்பொழுது வண்டிலின் ஓசையும் மேள-தாளம் கொட்டுவதுபோல் இருப்பதால் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு கவி பாடி வருவதும் ஒரு கண்கொள்ளாக் காட்சிதான். இத்தகைய நிகழ்வுகள் சிங்களக் கிராமங்களில் இன்றும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்னா வைபவம்

இப்பகுதி முஸ்லிம்களின் மார்க்கக் கடமையான 'சுன்னத்தென்னும்' கத்னா வைபவம் ஆண் சிறுவர்களுக்கு செய்வது வழக்கமாகும். இச்சுன்னத்துச் சடங்கினால் ஏற்படும் காயம் ஆறுவதற்கு சுமார் ஏழு, எட்டு நாட்கள் செல்லும். காயம் தாக்குப்படாமல் இருப்பதற்காக இரவும் பகலும் பலர் காவல் இருப்பார்கள். அவ்வேளைகளில் விளித்திருப்பதற்காக ஒவ்வொரு இரவும் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். பக்கீர் பாவாக்களின் 'ரபான்' அடித்தல், கவி பாடுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். இதற்கென்றே பாடல்களும் பாடகர்களும் இருந்தனர். இதில் விஷேடமாக இறக்காமத்தில் வசித்து வந்த நாகூரும்மா எனும் பெண்மணி பிரபல்யமானவர். புகழ்பெற்ற பாடகியுமாவார். பல வருடங்களுக்கு முன் இலங்கை வானொலியில் அவரின் பாடல்கள் ஒலி பரப்பாகின. இரு கண் பார்வையையும் இழந்த இவர் ஒரு இயற்கைக் கவி. கற்றறியாதவர். நூற்றுக்கணக்கான சுன்னத்து வீடுகள் விழாக்களில் மேடையேறிப் பாடியுள்ளார். இதைப்போன்று பல பக்கீர்மார்களின் பக்கீர் பைத்துக்கள் என்பன அப்பொழுது பெரும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இப்பொழுது TV, VEDIO, CD போன்றவைகள் இடம் பிடித்தாலும் முற்காலத்தில் இடம்பெற்ற கவி நிகழ்ச்சிகள் இன்றும் மக்களிடையே பிரபல்யம்பெற்று விளங்குவதையும் மக்கள் பெரிதும் ஆதரவளிப்பதையும் காண்கின்றோம். இப்படியாக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பண்ணிசைத்துப் பாடும் கிராமியக் கவிகளை மட்டக்களப்பு தென்பகுதி முஸ்லிம் கிராமங்கள் தோறும் காணலாம். இக்கவிதைத் தொகுப்பில் முதன்மையாக இறைவணக்கமாகப் பாடிய பாடல்களையும் ஏனைய கவிதைகளையும் காண்போம்.



## இறை வணக்கம்

01. அல்லாஹ்வை முன்னிறுத்தி
அவ்லியாக்களை பின்னிறுத்தி
கவிபடிக்கப் போறேன்
கனவான்களே கேட்டிடுங்கோ

02. அல்லாஹ்வை முன்னிறுத்தி
ஆலத்தைப் பின்னிறுத்தி
கவிபடிக்கப் போறேன்
கண்மணியே கேட்டிடுங்கோ

03. அல்ஹம்து லில்லாஹி
ஆலம் படைத்வனே
குல்லும் நிறைந்த
குதாவே உன் காவல்

04. நாகூரில் வாழும்
நாதரொலி மீராவே என்
நாவு திறக்க
நல்லுதவி செய்வாய்

05. ஆலத்தைப் படைத்து
அது நிரம்பப் பயிரேற்றி
வானத்தால் மூடிவைத்த
வல்லவனே உன்னுதவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கடலால் மழையிருட்டி
கரையால் பேய்ந்ததுபோல்
நாவால் கவிசொரிய
நல்லவரம் தரவேண்டும்

07. பிஸ்மிலை ஓதி
மேலோனை முன்னிறித்தி
பாட வரம் கேட்கேன் என்னை
படைத்தவனே துணை செய்வாய்

08. வெள்ளியோடு வட்டா
வெகுமதிகள் செய்தவர்க்கு
கவி படித்துக்காட்ட
கர்த்தாவே துணை செய்வாய்.





**வாழ்த்துக்கள்**

பல தரப்பட்ட சம்பவங்களை கவியாகப் பாடிய ஒரு கவியின் வாழ்த்துக்களாகப் பாடிய சில கவிகளைக் காணலாம்.

01. கதையாகக் கதைத்து
கணக்கொடுக்க ஏலாதென்று
கவியாய்ப் படிச்சி
காட்டிருக்கேன் தாய்மாரே

02. ஆழிக்கடலில் கொஞ்சம்
அள்ளி எடுத்ததுபோல்
என் கல்புக்கடலில் கொஞ்சம்
காட்டினேன் தாய்மாரே

03. இத்தனை பாட்டும்
இணக்கிப் படிக்கவில்லை
மாதாசரஸ் பதித்தாய் எனக்கு
மனமகிழ்ந்து தந்ததுகா

04. பாட்டுப் படிப்பதற்கு என்
பால்மனது கேளாமல்
நாட்டில் புளங்கியதை
நல்லாய் படிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. நாவு திறந்து இதை
நன்றாகப் படித்தால்
கேட்டுமகிழ வென்றால்
தெவிட்டாத நற்கவிதான்

06. எண்ணூறு பாட்டு நான்
இருந்து படித்திருக்கேன்
கண்டு களித்து என்கொரு
காணிக்கை போட்டிடுங்கோ

07. பாட்டுப் படித்தவர்க்கும்
படி என்று சொன்னவர்க்கும்
கேட்டிருந்த அனைவருக்கும்
கிருபை செய்வாய் நீ வாழி

08. நாட்டில் குடி சனங்கள்
நல்லாக வாழ்ந்திருக்க
வாழும் கருங்கொடியை
நான் வாழ்தினங்கா

09. தாயார் கிளையும்
தகப்பனார் வங்கிசமும்
மானிலத்து குடிசனமும்
வாழ்ந்திருக்க நீ வாழி



10. ஆல்போல் தழைத்து
அறுகுபோல் படர்ந்து
மூங்கில்போல் வளர்ந்து
முன்னிருப்பாய் நீ வாழி

11. நூற்றுக்கிருந்தாலும்
ஊத்துக்குப் போகுமட்டும்
துன்பமொன்றும் வராமல்
சுகம் பெறவே நீ வாழி

12. சீமை செழிக்க
சொல் வளர்ந்தோங்க
நாடு தளைக்க நீ
நல்லுதவி செய்வாய் வாழி

13. எரிச்சல் புகைச்சல்களும்
இடையூறு கண்ணூறும்
நாட்டிலணுகாமல்
நல்லுதவி செய்வாய் நீ வாழி

14. செய்த்தான் குறைகளும்
செய்வினை வஞ்சினைகள்
மற்றும் கெடுதலையை
மாற்றிட நீ வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஊரில் பலாயும்
உத்தியோத்தர் கெடுபிடியும்
ராஜ அநியாயங்கள்
நீ காப்பாற்று வாழி

16. சாகுமளவும்
சக்குறாத்து மட்டிலையும்
என் நாவில் கலிமாவை
நாட்டிவை நீ வாழி








## ஊர்பற்றிய பாடல்கள்

01. பூவில் விழுந்த வண்டு
பூவரசம் உண்ட வண்டு
பாணி குடித்த வண்டு
பறந்திடுமோ பாணமைக்கு

02. சிறியாக்குளமும்
சேர்ந்ததொரு பொத்துவிலும்
பாணமையும் சேர்ந்ததனால்
பலன் குறைந்து போனதாமோ

03. சீனெட்டி நெல்லும்
சிவந்த இறால் ஆணமும்
பொத்துவில் ஊரும்
பொருந்தினதோ உங்களுக்கு

04. கல்முனை ஊரும்
கரவாகு தேசமும்
காரைதீவும் சேர்ந்ததினால்
கல்பு பழுதானதோ

05. அப்பம் சுடும் புளியந்தீவு
அவலிடிக்கும் காரைதீவு
முட்டி தூக்கும் சம்மாந்துறை
முகப்பழக்கம் நிந்தவூர்

06. ஓமனப் பெண்டுகளே
உசந்த கொண்டைக்காரிகளே
மன்னாரான் வாரானென்று
வழிமறிச்சி நில்லாதீங்க

07. கண்டி கொழும்போ
கண்காணா ராச்சியமோ
கீழக்கரையோ என்ட
கிளியிருந்து பேசுறது

08. கண்டி கொழும்புமில்லை
கண்காணாச் சீமையுமில்லை
கீழக்கரையிலோதான் உன்
கிளியிருந்து பேசுறது

09. காத்தான் குடியிலிருந்து
கன்னி நாகு வந்திருக்கு
காசைத்தா மச்சான்
கை முழுத்தம் கொடுத்திடுவோம்

10. காத்தான் குடியான்
கடை வைக்க வந்திருக்கான்
அல்லாஹ் அறிய சின்னம்மா
அடி வயிற்றைக் கட்டிவைகா



11. காத்தான் குடிக்கு
கரத்தை கொண்டு போறமச்சான்
சீத்தை இரண்டு முளம் அந்தச்
சீமையிலே பஞ்சமோ

12. அக்கரைப்பற்றிலேயோ
அங்கு கரவாகிலேயோ
சம்மாந்துறையிலேயோ என்ட
தங்கவண்டார் தங்கிறது

13. காலி விளை பாக்கிற்கும்
களுதாவளை வெற்றிலைக்கும்
ஏலம் கிராம்பிற்கும்
ஏற்றதுதான் உன்வாய்

14. மருத வட்டான் குளத்தருகே
மாடு மேய்க்கும் தம்பிமாரே
மாலைப் பசுநாகு
மறியறுக்கு வந்ததாமே

15. கேரரைக்கல் மாடுவந்து
கூரை வைக்கோல் மேயுதென்று
ஏசாத ராத்தா நம்மட
எருது வந்து போகுதுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மானாகம் வட்டையிலே
மாடுதேடிப் போற மச்சான்
காரை முள்ளு தைத்திடாமல்
கலந்தரப்பா காவல்

17. கல்லாற்று நாவல் மரம்
கன்னிகட்டிப் பூத்ததுபோல் மச்சான்ட
கன்னத்து மீசை இரண்டும்
கண்ணுக்குள் தோணுதுகா

18. ஏறா ஊரானென்று
ஏளனமாய்ப் பேசாதேயடி
மோறாபோட்ட கத்தி உன்
மூர்க்கத்துக்கு மருந்து கட்டும்

19. வில்லுக்கரத்தையிலே
வெள்ளை மாட்டைப்பூட்டி
தட்டிவிடுகாமச்சான் நாம்
சம்மாந்துறை போய் வருவோம்

20. சம்மாந்துறையாரே
சங்கையுள்ள ஊராரே
பொழுதேறித் தண்ணீர் வார்க்க
பொருந்துமோ உங்களுக்கு



## வேளாண்மைபற்றிய கவிகள்

01. வாலாவெடுத்து
வயலில்வரம்புகட்டி
ஏநாளும் கொத்தி
இணக்குவது குற்றமில்லை

02. காடடர்ந்த சோலையிலே
கையெறிந்த யானையைப் போல்
புல்லடர்ந்த வட்டையிலே
புதுவரம்பு கட்டுவது

03. மாடுகழுவ
வண்டிக்குத்தாரடிக்க
சேனைப்பயிர் செய்ய
செப்பமான மாப்பிள்ளை

04. கத்தியெடுத்து
கதிர் அரியும் வேளையிலே
கள்ளியின் எண்ணம் வந்து என்ட
கையறுத்துப் போட்டுதடா

05. குளத்தைக் குறுகக்கட்டி
கொத்து நெல் நான்விதைக்க
குளத்து தண்ணீர் வற்ற வற்ற உங்கட
குத்தரிசி குறையுதுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. நாலு முழக்கம்பால
நாயழந்த வேளாண்மை
பகலெல்லாம் வெட்டி
என்பாடு போச்சுதடா

07. ஆற்றை மறித்து
அழகு சம்பா நான் விதைக்க
ஆற்றுத் தண்ணீர் வற்றி என்ட
அழகு சம்பா வாடுதுகா

08. ஏத்தால வேளாண்மை
இளங்குடலை பூங்கதிரு
மாட்டாலழியுதென்று என்
மன்னவருக்கு சொல்லிடுங்கோ





## கிண்டல் கவிகள்

01. தங்கத்தால் சங்கிலியும்
தகதகத்த பட்டாடை
பட்டணத்து செருப்பு
பகல் முழுதும் சுற்றிவாறார்

02. சங்கிலியும் தங்கமாலையும்
சரியான பித்தளையாம்
இடுப்பிலும் வாயிலேயும்
இருக்கிறதும் இரவல்தானாம்

03. காலையிலும் மாலையிலும்
நடுப்பகலும் சாமமும் இல்லை
வாயில் வெண் சுருட்டுடன்
வளவைச் சுற்றி வாறார்

04. பட்டுடுத்து சட்டைபோட்டு
பவுசாக நடந்தாலும்
அரைச்சல்லிக் காசுமில்லை
ஆறுநாள் பட்டினியாம்

05. அத்தர் புனுகுகளாம்
அழகான பவுடர் மணம்
இஞ்சி தின்ற குரங்குபோல
இவருக்கேனோ இச்சொகுசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கண்ணும் ஒரு பொட்டை
காதும் செவிடாம்
குருத்தெடுத்த வாழைபோல இவர்
கூனிவளைந்திருக்கார்

07. காக்கொத்தரிசும்
கண்ணுழுந்த செத்தல்மீனாம்
போக்கத்த மீரானுக்கு
பொண்ணுமா வேணும்

08. கச்சான் காற்றடித்து
காட்டில் ஒருமரம் நின்றதுபோல
உச்சியில் மொட்டை
ஓரமெல்லாம் நாலுமயிர்

09. நாணற் பூப்போல
நரைத்த கிழவனுக்கு
கும்குமப் பூப்போல இந்த
குமர்தானோ வாழுறது

10. முப்பத்திரண்டு பல்லில்
மூன்று பல்லுதான் மீதி
காகக் கறுப்பு நிறம் ஒரு
காலுமல்லோ முடவர்க்கு



11. தண்ணீருக்குப் போற மகளே
தரியாமல் வாமகளே
கன்னங்கரியவனைக் கண்டால்
கடைக்கண்ணாலும் பாராதே

12. வாண்டதெல்லாம் இந்த
வயிற்றுக் கொடுமையினால்
இருமல் தலையிடியாம் கிழவனுக்கு
என்ன சுகம் எந்தனுக்கு

13. சுட்டகட்டைபோல
சுடுகாட்டுப் பேய்போல
அட்டை முகறா நீ
அடுப்படிக்கும் ஆகுமாடா

14. வெள்ளை வெள்ளை என்று
வீணாசை கொள்ளாதே
பாலேறிச் செத்த
பதக்கடை என்றறியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக் காவியம்

இப்பிரதேசங்களில் கமச்செய்கையே பிரதான தொழில். இதில் நான்கில் ஒருபகுதி மேட்டு நிலம் மழையை எதிர்பார்த்து கமச்செய்கை பண்ணுவர். இதில் இடைக்கிடை மழையை எதிர்பார்த்து செய்யும் வேளாண்மை வரட்சியினால் பாதிக்கப்படும். அப்பொழுதெல்லாம் ஊர் மக்கள் ஒன்று கூடி தொழுகை நடாத்தி பிரார்த்தனை செய்வர். அப்பொழுதெல்லாம் கிராமத்து கவிஞர்கள் காவியங்கள் மூலமாக பிரார்த்தனை செய்வர். இதனால் சில சந்தர்ப்பங்களில் மழை பெய்ததாகவும் சரித்திர வரலாறுண்டு. எனவேதான் இங்கும் அத்தகைய பாடல் சிலவற்றைக் காண்போம்.

01. வானிறை புகழ் சிறந்த நபிமாரும்
வடிவான சஹாபாக்கள் மற்றுமொலிமாரும்
தேனிறை புகழ் தெரிந்தாழும் ஒஸ்தாதுமார் பொருட்டும்
தீன் தீன் என்றே மழை இறக்கு றகுமானே!

02. பீசபீல் அவுலியா பெரியார் பொருட்டும்
பேணும் ஒலிமார் கபுறாளிகள் பொருட்டும்
இசங்கணி அவுலியா இனியவர் பொருட்டும்
இப்போதே மழை பெய்ய வேணும் றகுமானே!



03. கலிமாவுடன் நோன்பு காணிக்கை வைத்து
கைறான முகில் மேகம் எங்கும் பரந்து
துடித்து எழுந்து நின்றேன் நான்
தூயவனே மழை இறக்கு றகுமானே!

04. ஏழுக்கு முன்னே இப்போ மழை பொழியாதோ
இரவு பகலாகுமுன் வெள்ளம் வராதோ
பள்ளம் படுகுளி நிறைய வெள்ளம்
பாருலகில் மழையை பார்த்தருளும் றகுமானே!

05. கொண்டை முடி வகுப்பெடுத்த கொடுமையினாலோ
கொசவப் பாவாடை கூத்துடுப்பினாலோ
மொக்காடு போடாத முடுமையினாலோ
இந்த மழை இல்லாக் கொடுமை ஏனோ?

06. கூலியாள் சம்பளம் கொடுக்காததாலோ
குறைகுற்றம் கண்டு விலக்காததாலோ
வாழும் குமர்களை வடுச்சொன்னதாலோ
வாறமழை பெய்யாததேன் வல்ல றகுமானே!

07. யெஹ்யா மௌலானா குறைசியர் பொருட்டும்
ஈமானுள்ள மூஃமின்கள் எல்லோர் பொருட்டும்
ஏழை எழியவர் சீமான்கள் இடர் பிணி நீக்கி
நீ மழை இறக்கு றகுமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. புவிவானம் மலைகடல் புகழுகின்றவனே
புகழ்பெற்ற நபிமார் ஒலிமார் பொருட்டாலும்
தெளிவான சஹாபாக்கள் தீனவர் பொருட்டாலும்
தீன் தீன் என்றே மழை இறக்கு றகுமானே!

09. சாஸ்திரம் குறிபார்க்கும் சண்டாளர்களாலோ
தரும நெறி பாராத பொய் வகீலராலோ
வஞ்சனை சூதுவாதாலோ
வாற மழை பெய்யாததேன் வல்ல றகுமானே!

10. அளவை நிறுவை தராசு அநியாயத்தாலோ
அகங்கார அநியாயப் பெருமையினாலோ
வஞ்சனை சூனிய சூதாலோ
வாற மழை பெய்யாது குறையென்ன றகுமானே!

11. கிறுதாமுடி குலையாத குறப்பிறப்புகளினாலோ
மாற்று வேதத்தார்போல மனம் போன போக்கில
வாக்கிழந்த சத்தியங்கள் வசை வடுவினாலோ
வாற மழை பெய்யாததேன் வல்ல றகுமானே!

12. தலை திறந்து தீனருந்தும் கொடியவர்களாலோ
தள்ளாடும் தறிகெட்ட வெறியர்களாலோ
தாய்தந்தை முகமெதிர்த்து கடுகடுப்பதாலோ
தூயவனே றகுமானே வாற மழை பெய்யாததேன்?



13 தங்க நகை காப்புடன் தாலி தொங்கட்டான்
தவறாது வாங்க வேணுமென்ற துர்வினையாலோ
தன்னாசை மணவாளன் மனம்சலிக்க
தட்டிவினை செய்த தவறுகளினாலோ

14. செந்நெல் கதிர் சுடுமணலில் கருகலாமோ
கண்ட பல மக்கள் கண் கலங்கி அழலாமோ
கைமுதலான கடனை இறுத்து
கஞ்சி குடிக்க கருணையுடன் வழி செய்வாய் றகுமானே!

15. மின்னலிடி முழக்கமோடு கிழக்கே எழும்பி
தென்றலது வீசி மழை பொழிந்து
ஏழை செய்த வயல் விளைய எங்கும்
மழை பொழிய வழி செய் அல்லாஹ்வே!

16. மட்டக்களப்பு மாநகர் எட்டுத்திக்கும்
பாவக் குளத்து பாவங்கை
ஆலங்குளத்து அகிலமும் விளைய
ஆண்டவனே அருள் புரிவாய்

17. பட்டிமோடு பாவங்கை சேனைக்காட்டு வட்டை
பலபேரும் கடனழிக்கும் ஊரக்காவட்டை
கோமாரி குடா வயல் குறைவில்லா பயிர் விளைய
குதறத்தான மழை பொழிவாய் றகுமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. தரும அரிசி போடாத பொய் வகீலராலோ
 தருமரிசி பெட்டிகளை மூடி மறைத்ததாலோ
மதிரசா உலமாக்கள் பணி அறியாததாலோ
 வாற மழை பெய்யாததேன் வல்ல றகுமானே!

19. மாவடிப்பள்ளி செயின் மௌலானா
 மறவாத சம்மாந்துறை வரிப்பத்தாஞ்சேனை
இங்கினியாகலை இறக்காமம் விளைய
 இணங்கிடுவாய் றகுமானே!

20. முத்துமணிமாலை மழைக்காவியம் பாட
 முதல்வனே உன்கிருபையால் மழை பொழிய
உழுவோடு தொழுகை நோன்பு காணிக்கை செய்ய
 உடையவனே உன்னருளைச் சொரிவாய்

21. மருதமுனை கல்முனை மணமாய் ஒலிக்க
 மகிமைமிகு கரைவாகு சாய்ந்தமருது
மாளிகைக்காடு காரைதீவு சம்மாந்துறைக்கும்
 மணமான நிந்தவூருக்கும் நிறைவான மழைபொழிவாய் ஆதி

22. ஆதம் நபி தொடுத்து அவ்வாவும் வாழி
 அன்பான நபிமாரும் அரசும் வாழி
துன்பவினை பஞ்சமும் தணிய வாழி
 தூயவனை மழை பொழிய வாழி
நபிமார்கள் நல்லமல் சஹாபாக்கள் வாழி
 உலமாக்கள் ஒலிமார்கள் உலகத்தோர் வாழி
இன்னலகற்றும் பீசபீல் அவ்லியாவும் வாழி
 இசங்கேணி அவுலியா எல்லோரும் வாழி



### கல்விக்காக தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற மகனை எண்ணிப்பாடியவை

01. அல்ஹம்து லில்லாஹி
 ஆதிபெரியவனே
கவிபடிக்கப் போறேன்
 காத்தருள்வாய் றகுமானே!

02. ஆழிக்கடலில் கொஞ்சம்
 அள்ளி எடுத்ததுபோல்
நாவால் சொரிந்துவிட
 நல்வாக்குத் தரவேண்டும்

03. ஆழிக் கடலில் என் மகன்
 ஆழியிலே போறாராம்
பரதேசி போற கப்பல்
 பவுத்திரண்டா ஆண்டவனே!

04. கண்ணாடி கொண்டு
 கப்பல் அடைக்கின்ற
காதர் மீரா அவுலியாவே
 காவல் செய் என் கண்மணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஏழு கடலுக்கு மங்கால
இருண்ட கடலுக்குமேலால
கருங்கடலுக்கு மங்கால
காத்தருள்வாய் வல்லவனே!

06. ஆழிக்கடலில்
அந்தரத்தில் போற கப்பல்
பங்கம் வராமல்
பவுத்திரண்டா றகுமானே!

07. மக்கா நகர் போற மகன்
மாறி இங்கே வந்தாரென்றால்
நெய்யால் விளக்கெரித்து
நின்று மவுலூது ஓதுவிப்பேன்

08. காலி கொழும்போ
கரை காணா ராச்சியமோ
தேவிப் பட்டணமோ மகனார்
சேர்ந்தவிடம் நானறியேன்

09. வங்காளக் கரையோ
வடசீமையோ நானறியன்
கீழக்கரையோ என்ட
சீதேவி ஓதுறது



10. சென்னைப் பட்டினமோ
தேவிப்பட்டினமோ
அம்மா பட்டினமோ என்
அருமை மகன் ஓதிறது

11. பழமரத்தைச் சுற்றி வரும்
பவளமணிப் பட்சிகளே என்ட
ஆசை மகனிருக்கும்
அரண்மனைக்கு போனிகளோ

12. கண்டால் மொழிந்திடுங்கோ
கனிய சலாம் சொல்லிடுங்கோ உன்
தாயார் இருந்து
தவம் கேட்கா வென்று

13. சாந்தால் தலை முழுகி
சந்தனத்தால் பொட்டுமிட்டு
தொட்டிலும் ஆட்டினது
தூர வழிபோகவென்றோ

14. சாதிக்கு சந்தனப்பூ
சபைக்கு நல்ல சூங்குமப்பூ
வாசலுக்கு மல்லிகைப்பூ என்ட
வாழ்மனைக்கு வாறதெப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஆரக்கழுத்தும்
அழகான தாடியும்
மையிட்ட கண்ணும் மகனார்
மறக்க மணம் கூடுதில்லை

16. போட்ட செருப்பும்
பொன்பதிச்ச மோதிரமும்
மார்பில் விழும் சால்வையும் மகனார்
மறந்திருக்கக் கூடுதில்லை

17. பத்தும் விளக்கே
பதிஞ்செழும்பும் சூரியனே
ஏந்தும் விளக்கே மகனார்
ஏன் மறந்தாய் என்னை

18. ஆறன்டால் ஆறுதில்லை
அமரென்றால் அமருதில்லை
பொங்கும் கடலுக்கு
பொறுமதி என்ன சொல்லட்டும்

19. அன்னத்தை அள்ளி
அருந்தப் போனனென்றால்
என்ட கல்பு பாடும்பாட்டை
கத்தன்தான் அறிவான்



20. கல்பிலிருக்கும்
கவலைகளைச் சொன்னேனென்றால்
இந்தப் பூமி நடுங்கி
புல்பூண்டும் அழிந்துவிடும்

21. ஆலாவடிவெடுத்து
அங்கு பறந்து வந்துவிடுவேன்
கடலை வளைத்து அல்லாஹ்
திடலாக்கிப் போட்டானில்லை

22. பிள்ளையொன்று பெற்று
பெருக்கத் தவிச்சவர்கள்
என்னைப்போல் பாவி
இருப்பார்களோ இவ்வுலகில்

23. வாழாக்குமரிகளே
வாழும் மனையாட்டிகளே
என்னைப்போல் பாவி
இருப்பாளோடி சண்டாளி

24. ஏழையடியாள்
இருந்தழுத ஒப்பாரி
கானகத்து பட்சிகளும்
காது கொடுத்து கேட்டுவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. கொம்பன் ஒரு குட்டி ஈன்றால்
குடி தாங்கும் என்றிருந்தன்
பன்றி பல குட்டி ஈன்ற
பாக்கிசத்திலானேன்

26. ஆண்கோழி கூவினால்
ஆலமெல்லாம் கேட்கும்
பெண்கோழி கூவுறதை
இப்பூவுலகில் யாரறிவார்

27. நேந்து தவம் கிடந்து
நெய்யால் விளக்கெரித்து
ஏந்தி வளர்த்த மகன்
இரக்கமெல்லாம் ஏன் மறந்தாய்

28. ஈரக்கொழுந்தே
இரக்கமுள்ள சீதேவியே
நெற்றி இளம்பிறை என்
நித்திரையில் தோணாதுகா

29. தாயை இழந்து
தகப்பனாரைத்தான் மறந்து
ஊரை நினையாமல் உன்
உஸ்தாதிடம் ஓதிறியோ



30. கீழக்கரையில்
கிதாபோதும் பிள்ளைகளே என்
ஆசைக்கலி தீர்த்த
அன்பு மகன் அடைக்கலம்

31. பத்துமாதம் வயிற்றில்
பாராச்சுமை சுமந்து
பெற்றேன் தாயார் என்ட
பேர் வழங்கிப் போகுமென்று

32. கூந்தலை அவிழ்த்து
கொடிமரத்துக்கு மண்கூட்டி
நேர்ந்து தவம் கிடந்தேன்
நேர்த்தி கபுலாகுமட்டும்

33. வெட்டின கட்டையிலே
வேர் தழைத்ததுபோல்
பெற்றேண்டி தாயார் என்ட
பேர் வழங்கிப் போகுமென்று

34. வந்த விதியை
மனம் பொறுத்து நானிருப்பேன்
பெற்ற இளம் வயிறு
பெரும் கடலாய் பொங்குதல்லோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பொங்கி அமருதில்லை
பூப்போல வாடுதுகா
அங்க முருகுதுகா அல்லாஹ்
ஆர்தலைகோ இப்பாவமெல்லாம்

36. சடையை வளர்த்திடட்டோ
சன்னியாசியாகிடட்டோ
மலையேறிப் போயிடட்டோ
மனதிலுள்ள வெஞ்சினத்தால்

37. அன்னம் கொடுத்து மகனை
ஆதரித்த பேர்களுக்கு
சுவர்க்கபதியை அல்லாஹ்
திறந்துவை றகுமானே

38. பத்தும் வயிற்றில்
பாலை அள்ளி வார்த்ததுபோல்
பெத்த மனமிரங்கி
பொறுதி செய்தேன் அல்லாஹ்வே

39. பொங்கு கடலாய்
பொல்லாத ராசுடையாள் என்ட
கல்பு கிடந்து கடல்போல்
பொங்குதல்லோ



40. தங்கக் கொடி பறக்கும்
சாகுல்ஹமீதொலியே என்
மங்கா மணிவிளக்கை
மாளிகைக்கு கொண்டு வா

41. பாத்திரத்தில் போட்ட பிச்சை
பங்கு போடக்காணாது என்ட
ஆசைக்கலி தீரவில்லை
ஆரிடத்தில் முறையிடுவேன்

42. ஏந்தும் விளக்கிற்கு ஒரு
எண்ணெய்த்திரி போட்டிடுவேன்
பத்துமாதம் சுமந்த என்ட
பாலகனைக் காண்பதெப்போ

43. நீதியின் விளிம்பில்
நிறுத்தி என்னைக் கேட்டால்
ஏழையிவள் வயிற்றில் ஏன்
படைத்தாய் பிள்ளையொன்றை

44. காட்டி மறைத்து
கக்கிசத்தைத் தந்திருக்காய்
அன்பிரக்கம் வைத்து
அனுப்பிரடா றகுமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. காகம் கழுகு குளுகுளுப்பை
கருங்குருவி நங்கணங்கள் என்ட
பாட்டோசை கேட்டால்
பறந்தோடி வந்துவிடும்

46. மாடப்புறாவும்
மலைநாட்டு நங்கணமும்
காடை கௌதாரிகளும்
கண்ணுறங்க மாட்டாது

47. மேகம் பறந்து
மேல்நாட்டில் மறைந்ததுபோல்
என் பாலன் பறந்து போன இடம் ஒரு
பட்சிகளும் கண்டதில்லை

48. பழமரத்தைச் சுற்றி
பவள மணிப்புறாக்கள் என்ட
பாலன் இருக்கும்
பார்மனையைக் கண்டீர்களோ

49. கண்டால் மொழிந்திடுங்கோ
கூடிய சலாம் சொல்லிடுங்கோ உன்
தாயார் இருந்து
துவம் கேட்காவென்று

50. எண்ணாத எண்ணமெல்லாம்
ஏழை மனம் பேதலிக்க
கண்ணுறங்கும் வேளையிலே
கனவொன்று கண்டேன் அல்லாஹ்

51. சட்டையும் போட்டு
தஸ்பீஹ் கையிலெடுத்து
ஆலிம் உலமாக்களோடு மகனார்
அங்கிருக்கக் கண்டேன்

52. என்ட வரிசை மகனார்
வந்திருக்கார் என்று சொல்லி
கண்ணை முழித்தேன்
கண்ட பலன் ஒன்றுமில்லை

53. கண்டெடுத்த புதையல்
கைசேதப்பட்டதுபோல்
நின்றழுதேன் மகனார்
நினைவு வரும் நேரமெல்லாம்

54. இலவமரத்தின் கீழ்
நின்றழுத ஒப்பாரி
காகம் இருந்து
காது தாழ்த்தி கேட்டதுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. என்னகா புள்ள
நீ இருந்து புலம்பினது
நான் பட்ட வேதனை சொல்ல
நாள் முழுதும் காணாதுகா

56. சாதி குடிசனமும்
தாய் தகப்பன் வங்கிசமும்
மரத்தில் கூடு கட்டி
மரத்தில்தான் தங்கிறது

57. தீனெடுத்து தின்று
தென்னைமரக் கூட்டிலிருந்து
முட்டையிட்டேன் பத்து
முப்பது நாள் காத்திருந்தேன்

58. காற்றும் மழையும்
கனபுயலும் தானடித்து
ஐந்து முட்டை சிதறி
அடித்துடைந்து போனதுகா

59. பணிய விழுந்து
பழுதாகிப்போனதென்று
ஐந்து முட்டை தப்பி
ஐந்தையும் நான் பொரித்தேன்



60. பத்தில் ஐந்து எனக்கு
பலன் தருமென்றிருந்தேன்
அதுவும் பலன் தராமல்
அடியோடப் போச்சுதல்லோ

61. என்ட குஞ்சுக்கிரை தேடி
கொண்டுவர நான் போனேன்
பொறி வைத்து என்னை
புடிக்கவல்லோ காத்திருந்தான்

62. அந்தப் பொறியில்
பொடிமாஞ்சி போயிடாமல் என்ட
குஞ்சிக்கிரை தேடி
கொண்டுழுந்தேன் காட்டில்

63. அழுதுகுளறி
அந்தரத்தில் தான் பறந்து என்ட
கூட்டுக்கு வந்தேன் அல்லாஹ்
ஒரு குஞ்சையும் காணவில்லை

64. பாணி இறக்க
பாளைக்கு ஏறினவன் என்ட
கூட்டையும் பிச்சி
குஞ்சையும் கொன்றுபோட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. எட்டு நாள் மட்டில்
இரை எடுக்கப் போகவில்லை
கதறி அழுதேன் அல்லாஹ்
கண்டபலன் ஒன்றுமில்லை

66. ஐந்து குஞ்சி பெற்ற
அவதியை சொல்லிருக்கேன் உன்
நெஞ்சிலுள்ள கவலையை
நீக்கி விடு கண்மணியே

67. கதறியழுது
கைசேதப்பட்டாலும்
ஆதி எழுதினதை
அழிக்கவும் முடியுமோ

68. காகமிருந்து
கதைத்த கதை அத்தனையும்
கல்பிலிருந்து ஒரு
கடல்போல் பொங்குதுகா

69. அழகுக் கிளி பறந்து
ஆகிரத்தில் சேருமென்றால்
எக்கீன் மரங்கள்
இணல் கொடுக்கும் என் கிளிக்கு



70. பள்ளிக்குப் பள்ளி
பரதேசி என்று சொல்லி
அன்னம் கொடுத்து உன்னை
ஆதரித்ததார் மகனே

71. சாத்திரமும் பார்த்தேன்
தஸ்பீகில் பால் போட்டன் என்
ஈரக்கொழுந்தே மகனார்
உன் சுகமென்றறியேன்

72. ஆலாவடிவெடுத்து
அங்கு பறந்திடுவேன்
எத்தீன் பரதேசி என் மகன்
இருக்குமிடம் நானறியேன்

73. பாட்டுப் படித்தேன்
பலன் ஒன்றும் நானறியேன்
காட்டுக் குருவிபோல
கத்தினதடி தாய்மாரே

74. கற்றவளுமில்லை
கவிவாணர் தானுமில்லை
பெற்ற கவலையினால்
புலம்பினது தாய்மாரே

75. கற்றோர் வாழி
கவிவாணர்தான் வாழி
மற்றோரும் வாழி
மனம் பொறுப்பாய் நீ ஆதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமிக்கு மருமகள் பாடிய கவிகள்

01. மாத்தைக்கு மாதம்
வந்துபோன மாமிக்கு இப்போ
வராமற்போனதினால்
மனவருத்தம் மெத்தவுண்டு

02. வாசல் மறந்தாய்
வழிப்பாட்டைத்தான் மறந்தாய்
பேச்சை மறந்தாய் மாமி
உங்கட பெரியதனத்தால்

03. அந்தி விடிந்து
அனுதினமும் ஓடிவந்தீங்க
இப்ப கடவல் மறிச்சி மாமிக்கு
கல் ஓதிப்போட்டதாரோ

04. கோடைக்குத் தென்னை
குலை நெருங்கிக் காய்த்ததுபோல்
அக்கரையில் பச்சை மாமி
யார் சொன்ன புத்திமதியோ

05. கடலும் இரையாது
கப்பலும் ஓடாது
இருளும் பிரியாது மாமி
ஈறலும் தீருதில்லை



06. மாதமொருமுறை என்
வாசலுக்கு வந்தீகளென்றால்
தங்க மாமியாரே என்ட
தயவறிவீங்க அப்போது

07. பொன்போல் வைத்திருப்பேன்
பூவென்று நீர் தெளிப்பேன்
கண்ணென்று வைத்திருப்பேன் மாமி
கபுறாடு போகுமட்டும்

08. ஐந்து வருடம்
அரிய குமராயிருந்து
வாண்டேன்கா மாமி உங்கட
வாசலுக்கு வரவேண்டுமென்று

09. ஒற்ற மரமாயிருந்து
உருகவடித்தேன் இப்போ
கந்து விசிறி மாமி
காய்த்த மரமானேன்

10. ஏழு கடல் கடந்து
இரத்தக் கடலில் முக்குளித்து
பால்கடலால் வந்தேன் மாமி
பாவனையைப் பார்ப்போமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வெண்கலத்தைப் பூசி
விளக்கெதிரே வைத்ததுபோல்
என்டகண்டு மாமியிட முகம்
கண்ணெதிரே தோணுதுகா

12. சித்திரிச்ச மெத்தையிலே
தேர்ந்தெடுத்த பொன்தகடு
பார்த்தெடுத்த பால் பளிங்கு
இந்தப்பகுதிக்கு வந்து போனாலென்ன

13. இலந்தை மரத்தைக் கிளி
இலவுகாத்த கதைபோல
வருந்துகின்றேன் மாமி என்ட
வாசலுக்கு வாறதெப்போ

14. ஆடு கொடியானேன்
அந்தரத்துக் கொடியானேன்
வாடும் பயிரானேன் மாமி
வண்ணமுகம் காணாமல்

15. பண்டார வன்னியன்
படைவந்து சூழ்ந்ததுபோல்
கதை வந்துசூழ மாமி
கத்தனிட்ட கட்டளையோ



16. முத்து விளைந்த கொம்பன்
முதலிமார்க்கேற்ற கொம்பன்
தங்கம் விளைந்த கொம்பன் மாமி
என்ட தயவறியப் போறதில்லை

17. கட்டைக்காலும் நோகா
கடிய மண் சூடெடுக்கா
வைரமுகம் வேர்வை சிந்தா மாமி
மாதம் ஒருமுறை வந்தாயென்றால்

18. அல்லாஹ் இருக்கான்
ஆகிறத்து பாம்பிருக்கு
கடிக்குங்கா மாமி என்னை
கண் குறையக் கண்டாயென்றால்

19. பாயை விரித்து
படுக்கையில் கொண்டுழுந்து
மாறிப் படுத்தேன் மாமி
மனக்கவலை தீருமென்று

20. பூசின செம்பில்
புழுதிபட்டதுபோல் என்ட
வண்ண முகத்தில் மாமி
மண்ணை அள்ளிப் போட்டிடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கிட்ட இருந்து
கிளிபோல் கதைகதைக்க
போட்டு வைப்போமென்றால்
பொறுக்குதில்லை என் மனது

22. ஆகிறத்து நாளையிலே
அதாபுபடும் வேளையிலே
காசி பணம் வந்து நம்மை
கரை சேர்க்கப் போறதில்லை

23. பாலம் கடந்து
பதினாறு ஒழுங்கை கடந்து
மாறி வந்தேன் மாமி என்ட
மனக்கவலை தீருமென்று

24. பத்தும் விளக்கே
பதிந்தெழும்பும் சூரியனே
ஏற்றும் விளக்கே மாமி
ஏன் மறந்தாய் இப்போது

25. வாழைப்பழமே என்ட
வருக்கைப் பலாக்கனியே
கொய்யாப்பழமே மாமி
கோபமென்ன என்னுடன் நீ



26. அடித்தால் அடிமாறும்
அடிபட்டால் புண்ணாறும்
வாயால் சுட்டவடு மாமி
ஆறாது ஒரு நாளும்

27. கல்பைத் திறந்து
காந்த விளக்கேற்றி
ஆராய்ந்து பார் மாமி
ஆர்மேலே குற்றமென்று

28. ஊசியிலே காந்தம்
உருகிப் பிடித்ததுபோல்
தாவிப் பிடித்தேன் மாமி
தாபரிப்பாய் என்றுசொல்லி

29. வீட்டுக்கு இலட்சுமிதான்
வீதிக்குப் பால்குடம்
பந்தலுக்கு சந்தனப்பூ மாமி
என் வாழ்மனைக்கு வாறதெப்போ

30. சாதியிழப்போ
தாழ்வுகுடி வங்கிசமோ
குடிகுலங்கள் இல்லையென்றோ
குறை சொல்லிப் பேசுறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. வாடாத மல்லிகைப்பூ
மங்காத குங்குமப்பூ
சபைக்கு நல்ல சந்தனப்பூ
சந்திக்க வந்தாலென்ன

32. உண்ணாமல் வாடவில்லை
உறங்காமல் வாடவில்லை
கல்பிலிருக்கும் கக்கிசத்தால்
வாடுகிறேன் மாமி

**வாழ்த்துகின்றோம்...**
"கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்" என்னும் கலை, கலாசாரா நூலை வெளியிடும் அல்-ஹாஜ். எம். வை. உதுமான் சாஹிப் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

**கனூஸ் இலக்ரிகல்ஸ்**

**பிரதான வீதி, அக்கரைப்பற்று**

**எம்மிடம்...**
❊ சகல விதமான குளியலறைப் பாத்திரங்களையும்
❊ பலவிதமான தரை ஓடுகளையும்
❊ நீர்த்தாங்கிகள், நீர் விநியோகக் குளாய்கள்
❊ நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

KANOOS ELECTRICAL
MAIN STREET, AKKARAIPATTU.
Tele/Fax : 067 22 77471



## மதினிக்காகப் பாடியது

01. தங்கக்கல மெடுத்து
சாதிலிங்க மைபோட்டு
வெள்ளி மடலில் மதினி
வேணுமென்று காட்டிரிக்கேன்

02. பொன்னின் கலமெடுத்து
புதிதாக மை இணக்கி
வரைந்திருக்கேன் மதினி
வாசித்துப் பார்த்தறிகா

03. மெத்தையில் இருந்து
வெளியே கால் நீட்டி
சிந்து கவி படித்திருக்கேன் மதினி
சீர்தலையாய் படித்திடுகா

04. பஞ்சணை மெத்தையில்
படுக்குமந்த வேளையில்
நித்திரைக்கண்ணில் மதினி
நினைவு வந்த கவிதான்

05. சிற்றாமணக்கு மரத்திலே
சில்லூறு கூடு கட்டி
முத்தாய் விளைந்ததுபோல
முடுகுதல்லோ நம்முறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. அழகால் குறைச்சலோ
ஆதரவு போதாதோ
மனதிற்கசடோ
மட்டெடுக்கக் கூடுதில்லை

07. கசடு வினை வைக்கிறது
காபிரீன்கள்தான் மதினி
மூமீன்களுக்குக் கோபம்
மூன்று நாள் மட்டுமேயாம்

08. சாதியில் இழுப்போ
தகுதி இல்லையென்றோ
ஆதரவு போதாதோ
ஆராய்ந்து பார் மதினி

09. சாதி குலங்கா
சங்கையான வங்கிசங்கா
சாயம் பறந்து மதினி
சங்கைகெட்டுப் போகவில்லை

10. கிளிகள் கதைக்கிறதும்
கிளி கிண்ணறம் பேசுறதும்
மதுரங்கிளி பாடுறதும் மதினி
உங்கட மாளிகையில் மெய்தானா



11. மங்குஸ்தான் பழமே
மணிதிரண்ட முத்தே
சாதியிலுயர் மணியே மதினி
சாந்த குணம் நானறியேன்

12. கதைத்த கதையெல்லாம்
கல்பில் பூட்டியிருக்கேன்
சடுதியாய் மதினி ஒரு
தாக்கல் வரக்காட்டிடுகா

13. தங்கக் கொடி பறக்க
தாதிமார் வேலை செய்ய
வெண்சாமரை வீச மதினி
விதி வந்து சேர்வதெப்போ

14. ஈரலுக்கும் இதயத்திற்கும்
இடையில் ஒரு தலமிருக்காம்
புத்தியுள்ள மதினி அதன்
பொருள் அவுத்துக் காட்டிடுகா

15. சாதிலிங்கப் பூப்பூத்து
தரையில் சொரிந்தாலும்
வாசமதிகமென்று
மதிப்பிருக்கும் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மாலக்கொடியே
மலைநாட்டு நங்கணமே
கூடப் பறந்தாலும் எங்கட
குணமறியப் போறதில்லை

17. நாவிற் சுரக்கும் நாவற்பழமே
நானருந்தும் தேன்குடமே என்ட
ஈரத்துளிரே மதினி உங்களுக்கு
என்ன குற்றம் செய்ததுகா

18. ஐந்தூருத் தட்டானும்
அகத்திப் பிராமணனும்
சங்கூதிச் சமைத்த தாலி
தவம் கிடக்கு காம்பிராவில்

19. சந்திக்குச் சந்தி
தத்திபோட்டு குரவையிட்டு
மருதவண்டி மாற்ற மதினி
மனச்சம்மதம் இல்லையாமோ

20. நடுவெளியில் ஒரு மரமாய் அதில்
நாலாயிரம் கிளியினமாய்
அதிலொரு கிளி நான் மதினி
அருமையறியப் போவதில்லை



21. தாலி இன்னும் கட்டவில்லை
தாய்ச்சோட்டை தீரவில்லை
ஏங்கியழுதேன் மதினி
எண்ணமெல்லாம் மெய்மறந்து

22. தாழக்கிணற்றில்
சலம் கொதித்து வாறதுபோல்
என் மனம் கொதித்து
மழையாய்ச் சொரியுதுகா

23. சார்ந்தோருக்கு சந்தனப்பூ
சாதிகுலத்துக்கு குங்குமப்பூ
எங்கள் குணமதனை மதினி
நீயறியப் போறதில்லை

24. குத்துவிளக்கு
குமிழ்பதிய எண்ணெய்யூற்றி
பத்தியெரிந்தாலும் மதினி
பாட்டொழியப் போறதில்லை

25. கடலால் மழையிருட்டி
கரையில் பெய்வதுபோல் என்ட
கல்பில் வரும் பாட்டையெல்லாம்
கணக்கெடுக்கக் கூடுதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. காட்டு மாட்டைக் கட்டி
காலடியில் வைத்ததுபோல்
கல்பு நிறைந்த மதினிக்கு
கவி பாடிக்காட்டிருக்கேன்

27. இருந்த இருப்பில்
இருநூறு பாட்டெடுத்தால்
படுத்த படுக்கையில் மதினி
பத்துலட்சம் பாட்டெடுப்பேன்

28. படுத்த படுக்கையில்
பத்துலட்சம் பாட்டெடுத்தால்
நடக்கும் நடையில்
நாலுகோடிப் பாட்டெடுப்பேன்

29. எங்கள் கருவை அறியாய்
கத்தாவை தெரியாதோ
புலவனார் பூட்டியென்று
புறக்கல்லையோ உங்களுக்கு

30. ஈப்பறந்தால் சத்தமுண்டு
எறும்பு நடந்தால் மண் சரியும்
வாது வந்து விட்டதென்று
வாய்ப்பாட்டுப் பாடாதே



31. ஆக்கின சோற்றில்
ஆவி பறக்கிறதுபோல் என்
கல்பு நிறைந்த மதினி
கவலைகளைச் சொன்னேன்கா

32. எரிக்கிலைக்கு தண்ணீர் வார்த்து
எத்தனை பூப்பூத்தாலும்
எரிக்கிலம் பூவிற்கு மதினி
ஏது மணம் ஒன்றுமில்லை

[illegible]பதாண்டு காலம் நல்லதோர் முயற்சி செய்து நாட்டுக் கவிகளை [illegible]நூலில் வெளியிட்டுள்ள அல்-ஹாஜ். எம். வை. உதுமான் சாஹிப் [illegible]அவர்களின் இம்முயற்சி மென்மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகின்றோம்.

**நெஷனல் பாம் ஹவுஸ்**

**488/A, பிரதான வீதி**
**சாய்ந்தமருது - 14**

இங்கு....

- விவசாயிகளுக்குத் தேவையான சகலவிதமான இரசாயணப் பொருட்கள்
- அண்டனாவும் அதன் உதிரிப்பாகங்களும்
- இலக்றிகல் உபகரணங்கள் போன்றவைகளை நியாய விலையில் வாங்கிட நம்பிக்கையுடன் நாடுங்கள்...

**NATIONAL FARM HOUSE**

488/A, MAIN STREET, SAINTHAMARUTHU-14
Tel: 067 2221191, 077 6757396
**Prop: A. A. Muneer**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணும் பெண்ணுமாகப் பாடியவை

### ஆண் – பெண் I

01. முன்னங்கைக்கும் பத்தமாட்டாய்
முழங்கைக்கும் பத்தமாட்டாய்
சங்கைக்கும் பத்தமாட்டாய்
சரசம் விளையாட வந்தாய்

02. முன்னங்கைக்கும் பத்துவேன்
முழங்கைக்கும் பத்துவேன்
சங்கைக்கும் பத்துவேன்
மச்சானென்று சொன்னியென்றா

03. பாலாடா மச்சான்
பழமாடா நானுனக்கு
தேனாடா மச்சான்
என்னோடு விளையாடவந்தாய்

04. பாலென்றால் பருகிடுவேன்
பழமென்றால் தின்றிடுவேன்
நூலென்றால் நெய்திடுவேன் மச்சி
நோகவிளையாடவில்லை



05. நடுக்கடலில் புன்னைமரம்
நாலுதிக்கும் வேரோடி
பூத்துமலர்ந்ததை அறியாமல் மச்சான்ட
புத்தி மங்கிப் போனதென்ன

06. கப்பல் கடலோட்டம்
கடதாசி மையோட்டம்
மதராசிப் பட்டழகி உன்
மனநோட்டம் நானறியேன்

07. தங்கத்தகடோ
தகதகத்த பொன்தகடோ
வெள்ளித்தகடோ இப்போ
விலைமதிக்கக் கூடுதில்லை

08. போட்டா வரம்பால
புறா மேய்ந்து போறதுபோல
சாயலுள்ள பெண்ணே
தலை நிமிர்ந்து பாத்தாலென்ன?

09. போட்ட வரம்பால
புறா மேய்ந்ததென்றால்
நாட்டவருக்கெல்லாம்
நடை வரம்போ என்னுடம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் – பெண் II

01. சரசரவென்று ஓடிவந்து
தலைவாசல்தான் திறந்து
கதவில் தெறிக்க நீ
யார் பொடியா ஒரு முறைக்கு

02. பள்ளிக்கூடத்தில்
படிக்குமந்த வேளையில்
ஒன்றாயிருந்த
உறவாளனல்லவோ

03. ஏழு வயதில்
எத்தீன் பராயத்தில்
பள்ளிவிட்டு விலகியிருக்கேன்
என்னைப் பார்க்க வந்த மாயமென்ன

04. பாயை விரித்து
படுப்போமென்று நான் போனேன்
உன் நினைவு வந்து
ஓடிவந்தேன் கண்மணியே

05. காலமில்லாக் காலம்
கண்டதில்லை ஒரு நாளும்
இன்றைக்கு வந்த
இடர் என்ன சொல் மச்சான்



06. பாளையைத் தட்டி
பையக்கவுறெறிந்து
முட்டிக்கால் போட்டு மச்சான்
முறை களத்த வந்ததோ

07. முந்திரிகைப்பழமும்
மூன்றுவகை முட்டாசும்
கற்கண்டும் தாரேன்
கதவு திற கண்மணியே

08. கதவு திறக்கவொண்ணா
கடும்பூட்டு என்கதவு
இறப்பால் பாய் தருவேன்
இருந்து போங்க மன்னவரே

09. கல்லும் கரையும்
காராம்பசு கன்றீனும்
மலையும் இடிந்துவிடும் உன்
மனமிளகவில்லையோகா

10. வாவென்று சொல்லி
வருந்தியழைத்தேனென்றால்
போவென்று சொல்ல
பொருந்துமோ என் மனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வாவென்று சொல்லவில்லை
வருந்தியழைக்கவில்லை
போவென்று சொல்வதற்கு
பொருந்துமோ என் மனது

12. உமறுலெவ்வைப்போடி
உத்தமர் தலைமரைக்கார்
பூட்டித்திறப்பெடுத்திருக்கார்
திறக்கவொண்ணா என் கதவு

13. திண்ணையிலே படுக்கவொண்ணா
தெள்ளுக்கடி பொறுக்கவொண்ணா
கதவு திற கண்மணியே
கலசம் மாறிக் கதைத்திருப்போம்

14. வாழையிலே குலையிருக்க
வாழ்மயிலாள் சிறையிருக்க
சேனையிலே நானிருக்க
செப்பெடுக்க சம்மதமோ

15. கல்லோடு கல்லணைய
கடலோடு கடலணைய
உன்னோடு நானணைய
எனக்குற்ற வரம் தா மதினி



16. ஓதிப்படிச்சி
ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்கு தீங்கு செய்தால் அல்லாஹ்
எள்ளளவும் ஏற்கமாட்டான்

17. அன்புக்கழிவுண்டோ
ஆசைக்கோர் எல்லையுண்டோ
பருவம் வந்தாலும் மச்சி
பற்றுத்தான் தீர்ந்திடுமோ

18. மாடப்புறாவே
மலைநாட்டு நங்கணமே
மாமிக்கொரு மகனே
மறந்திடாதே என் முகத்தை

19. நாகம் படமெடுக்க
நல்ல முத்தால் மாலை தொடுக்க
அன்னம் சிறகொதுக்க நான்
அஞ்சுவேனா பூத்தொடுக்க

20. கதைப்பார் கதையெல்லாம்
கல்லுரிகி நெல் விளைய
சிரிப்பார் கொடுப்பால் மச்சான்ட
சொல்லையுமா நம்புறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வாழைப்பழமே
வருக்கைப் பலாக்கனியே
வம்பதைத் தேனே
வருந்துகின்றேன் உன்னால

22. சந்தன மரத்தை மச்சான்
சந்திக்க வேண்டுமென்றால்
பூவலடிக்கு மச்சான்
பொழுதோட வந்திடுங்கோ

23. விடியுதுகா விடியுதுகா
விடி ஆலாக்கத்துகா
ஆளும் பரிமாறுதுகா
ஆசை வண்டே போயிரட்டோ

24. ஆரும் அறியாமல்
ஆராம்பு காட்டாமல்
ஆசை மச்சான்
போயிருங்கோ பத்திரமாய்

25. கடலே இரையாதே
கானலே வீசாதே
நிலவே மறையாதே என்ட
நீலவண்டார் போகுமட்டும்



## ஆண் – பெண் III

01. பூவலைத்தோண்டி
புதுக்குடத்தைக் கிட்ட வைத்து
ஆரம் விழுந்த கிளி
அள்ளுதுகா நல்ல தண்ணீர்

02. தண்ணீர் தந்து என்
தாகம் தணியாவிட்டால்
நானிருக்கு மட்டும்
நல்ல தண்ணீர் அள்ளவிடேன்

03. ஆதி படைத்த தண்ணீர்
ஆலமெல்லாம் உள்ள தண்ணீர்
அள்ளவிட மாட்டேனென்று
அகற்றி வைக்க நீயாரோ

04. தண்ணீரைக் கண்டு
தாகமிகக் கூடுமென்றால்
ஆறு குளத்தில்
அருந்திடுங்கோ நல்ல தண்ணீர்

05. தண்ணீர் அள்ள வந்து
தனியே இருக்கும் பெண்ணுடன்
சல்லாபம் செய்ய
சமயம் வந்ததென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பூலோக ஆசை
பெண்ணுக்கும் உள்ளதுதான்
உன்னைவிடேன் கண்ணே
உயிருடலில் உள்ளவரை

07. வானத்தில் உதித்த
வெள்ளியென்று எண்ணாதே
குலத்தில் உதித்த
குணமான மாமிமகள்

08. சித்தரித்து வைத்த
சிலைபோல் வந்து நின்று
சிரித்த முகத்தோடு
சீதேவியே அள்ளுகின்றாய்

09. திருக்கொண்டைப் பூப்போல
செவி நிறைய அல்லுகுத்து
தைக்குதுகா என் மனதை
தலை நிமிர்ந்து பார் கண்ணே

10. மொக்காடும் போட்டு
முகம்மூடி அள்ளும் பெண்ணே
மோகமையல் தீர
முறையுமுண்டுதான் மயிலே



11. கண்ணியாய் இருப்பதால்
காணமனம் கூசுதுகா
தண்ணீர் அள்ளி வைத்திருக்கேன்
தாகம் தீர நீயருந்து

12. தண்ணீர் குடித்தேன்
தாகம் தணியவில்லை
பன்னீர் குடித்தால்தான்
பசி தீரும் கண்மணியே

13. தேனின் பலாக்கனியே
தெவிட்டாத மாம்பழமே
கொஞ்சும் கிளிமொழியே
குத்துதுகா உன்னழகு

14. தண்டையழகும்
தார்வைக்கொலுசமும்
கொண்டையழகும்
குணத்தை எடுத்துக் காட்டுகா

15. ஆளை அறியாமல் மச்சான்
அகங்காரம் பேசிடாதே
வாயைத் திறந்தால்
வளநாடு பூச்சொரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. சிலிப்பாத்தலையழகா
செண்பகப்பூவழகா
உடுப்பாலழகா
உன் மனதை நானறியேன்

17. முந்திரிகைப்பழத்தில்
முத்துப்பதித்தது போல்
கையிலிருந்து கணையாழி
கண் சிமிட்டி மின்னுதுகா

18. குதிசிறுசி படமழகி
குதிரை நடைக்காறி
நடை இடறிக் குடமுடைய
நாயனின் கட்டளையோ

19. தண்டையழகும்
தலையிலுள்ள வாசனையும்
மின்னலிடையும்
மிகமனதை வாட்டுதுகா

20. மண்ணை எடுத்து
மண்ணுருவம் செய்தாலும்
என்னை எடுக்க மச்சான்
என்ன தவம் செய்யவேணும்



21. உன்னை எடுத்து
உன்னழகு பாக்கிறதை
ஒரு பாம்பைப் பிடித்து
படமழகு பார்த்துதிடுவேன்

22. மண்ணாசை நீயறியாய்
மணத்தாசை தானறியாய்
பெண்ணாசை தானறியாய்
பேச மனம் கூசுதுகா

23. மண்ணாசை குங்குமங்கா
மரத்தாசை சந்தனங்கா
என்னாசை உன் மனங்கா
இரக்கம் வைத்துப் பார் கிளியே

24. கதவைத் திறந்து
கதைத்திருக்க வந்திடுவேன்
வாப்பா அறிந்தால்
வங்கொலைகள் வந்திடுமே

25. வாப்பாவறிந்தாலென்ன
வாளெடுத்து வந்தாலென்ன
ஊரார் அறிந்தாலென்ன
உன்னை விடேன் கண்மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. தோட்டத்து மாம்பழத்தை
துரைமகன் தின்னாமல்
பொங்கலுக்கு வந்த
பொடியனோ தின்னுறது

27. வாந்து முடித்த கொண்டை
மகிழம்பூ வைத்த கொண்டை
வாடி வதங்குதுகா ஒரு
மணவாளன் முகம் காணாமல்

28. மண்ணை நம்பி மரமிருக்கு
மரத்தை நம்பி இலையிருக்கு
உன்னை நம்பி நானிருக்கேன்
உற்ற கதை சொல்லிடுகா

29. என்னத்தைச் சொன்னாலும்
ஏற்குதில்லை உன் மனது
சடலம் அறிய ஒரு
சத்தியம் தந்திடவா

30. சத்தியங்கள் வேண்டாம்
சந்தேகங்கொள்ள வேண்டாம்
கட்டாயம் கட்டுவேன் தாலி
கண்மணியே பொறுதி செய்கா



31. தெருவால போகவொண்ணா
தேன்போல் மணக்கிறது
கனியருந்த நான் வருவேன் உங்கட
காக்காமார் காவலாமே

32. காவலரனோ மச்சான்
கள்ளனுக்கு முள்ளரனோ
வேலியரனோ மச்சான்
வேண்டுமென்ற கள்வனுக்கு

33. காவலரனுமல்ல
கள்ளனுக்கு புல்லுமரணல்ல
பேணுமென்ற காளைக்கு
வேலி ஒரு அரணா மச்சி

34. கடப்படியில் வந்து நின்று
காளை கனைக்குமென்றால்
எங்கிருந்த போதும் நாகு
எழுந்து வரமாட்டாதோகா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் – பெண் IV

01. பூசின செம்பே
போரைதீவு வெண்கலமே
நாகூர் மணிவிளக்கே
நாடியிருந்தால் நலம் பெறுவாய்

02. வானத்தில் வெள்ளி
மங்காமல் பூத்ததுபோல் என்ட
சீனத்துச்செப்பே மச்சான்
சிறையிருக்கேன் உன்னாலே

03. அத்திமரத்தில் ஆலமரம்
குடிகொண்டதுபோல
எத்தீன் வயிற்றில் என்னை
ஏன் படைத்தாய் றகுமானே

04. சருகலில் மழை பொழிய
சாமவெள்ளி பூத்தொடுக்க உன்
விஸ்தாரமான மாளிகைக்கு
வேண்டுமென்றால் சொல் கிளியே

05. வெள்ளியினால் பாக்கரிந்து
வெற்றிலைமேல் வைத்து
சப்பத்தருவேன் மச்சான் என்ட
சங்கை பழுதாகிடுமே



06. நினைத்தால் நெருப்பு
நெஞ்சு தட்டும் சலிப்பு
மாறா நெருப்பு என்ட
மனமடங்குதில்லை

07. காலமில்லாக் காலம்
கால் நடையாய் ஓடிவந்து
கதைத்த கதை முழுதும் என்ட
கல்பிலேதான் போட்டிருக்கேன்

08. உருக்கித் தெளித்த
உருபாவில் ஊத்தையுண்டு
பால் பயற்றங்கிளியார் மனதில்
ஒரு பாகுபாடும் இல்லை

09. காறிக்கனைத்து மச்சான்
கடவலுக்கு வந்தாரென்றால்
எண்ணெய்த்திரி கொழுத்தி
ஏந்திடத் தேவையில்லை

10. கட்டிலமுழுதுகா
கடதாசி மின்னுதுகா
வாசல் குளறுதுகா என்ட
வெள்ளிமடலில்லையென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஒற்றை மரமானால்
ஒருமித்து நின்றிடுவேன்
கந்து விரிந்த மரமானேன்
காய்த்த மரமுமானேன்

12. கோட்டை அதிமதுரம்
கோரோசனை குங்குமப்பூ
சாதிக்காய் பச்சமஞ்சள் மச்சானின்
சதுரமெல்லாம் ஓர் மணம்தான்

13. நின்று கதைத்து மச்சான்
நெருப்பை அள்ளிக்கொட்டாமல்
இருந்து கதைத்து மச்சான்
இளைப்பாறிப் போனாலென்ன

14. பொடுபொடுத்த மழைத்தூத்தல்
பூங்காரமான நிலா
கதைத்திருக்க நேரமில்லை
கண்மணியே போய் வரட்டோ

15. வாடாத பூவே
வதங்காத தாமரையே
சோர்ந்திடாதே என் கிளியே
உங்களுக்கு ஒரு சோடிசேரு மட்டும்



16. ஆடு கொடியிலே
அந்தரத்தில் போயிருந்து
கைவிடுவேன் கண்டார் உன்
கவலை வந்த நேரத்தில்

17. மலையில் ஏறி
மலைப்பிரம்பு நுனி நறுக்கி
ஈடு தந்த மச்சான்ட
ஈறலெப்போ தீருவது

18. காட்டுக்கிளிகளெல்லாம்
காட்டிலே தங்கிறது
கூடு கலைந்த கிளி எந்தக்
கொப்பிலோ தங்கிறது

19. வெற்றிலைக்கு நாருரிச்சி
வெள்ளிவட்டா கிட்டவைத்து
சப்பக்கொடுப்பேன் என்ட
சங்கை பழுதாகிடாமல்

20. பத்து வருடம்
பதினெட்டுக் காலம் மட்டும்
சிறையிருக்கேன் என்று என்ட
தேன் மொழிக்கு சொல்லிடுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. சாயக்கொண்டை கட்டினாலும்
சளிக்க எண்ணெய் பூசினாலும்
ஏவி நடந்தாலும் மச்சி
ஏற்றெடுக்க யாருமில்லை

22. ஆரணாக் கொடிக்கு
அரும்புகசை கட்டினாற்போல் இப்ப
உள்ள ஆம்பிளைகளுக்கு
இடுப்பிலேயும் இசக்கமில்லை

23. கொண்டையறுப்பேன்
கொசவத்தைப் பிடித்திழுப்பேன்
மானத்தைக் குறைப்பேன் உன்ட
வாப்பாவிடம் சொன்னியென்றால்

24. உச்சாரக்கொப்பிலே
உயர்ந்த ஊஞ்சல் போட்டிருக்கு
வைத்தாட்டப் பிள்ளையில்லை
விலை கொடுத்தோ வாங்கிறது

25. அள்ளுறதும் ஆற்றிலே
அணைக்கிறதும் கொடுங்கையிலே
வார்க்கிறதும் வட்டையிலே என்
வங்கிசத்தை ஏன் குறைக்காய்



26. சீத்தை உடுத்து
சிற்றொமலும் கைப்பிடித்து
வாடைக்கொதுங்கி
வருவேன் நான் மச்சான்

27. மச்சானே மாம்பழமே
மாமி பெத்த பாலகனே
ஏலம் கிராம்பே மச்சான்
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

PRADESHIYA SABHA
07 AUG 2007
P
AKKARAIPATTU





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் – பெண் V

01. அடிதெரியா நுனி தெரியா
அடிக்குத்துப்பாய் தெரியா
போட்டுப் படுக்கும் புறம் தெரியா
நீ போ பொடியா தூரத்தே

02. பொடியன் பொடியன் என்று
புறதானம் பேசாதே
சித்தலியன் குட்டியிது
சீக்கிரம் கையெறியும்

03. வட்டாப்படிக்கம்
வடிவான சேவரக்கால்
பொனபதிச்ச கிள்ளவடு அந்த
பொடிச்சி வைத்து ஆளுதுகா

04. தோடு சிமிக்கியெங்கே
தோகை மயில் வடிவுமெங்கே
மாலைப்பதக்கமெங்கே மகளின்
மான் விரட்டிப்பார்வையெங்கே

05. கடலழகி மடலழகி
காஷ்மீரப்பட்டழகி
வாழை மடலழகி புள்ள
வாழாமல் ஏனிருக்காய்



06. வங்காளம் போறனென்று
மனக்கவலை வையாதே உன்
சிங்காரக் கொண்டைக்கு
சீப்பறுத்து அனுப்பிடுவேன்

07. ஒன்றுக்குமில்லை கிளி
உன்னை நான் விரும்புறது
உன்ட சந்துசடைக்கும்
சரிந்துழுந்த தேமலுக்கும்

08. கதையழகி நடையழகி
நாகப்பட வடிவழகி உன்
நெற்றி இளம்பிறை என்
நினைவை விட்டு மாறுதில்லை

09. குஞ்சு குழந்தையிலே
கூச்சம் தெளித்த மச்சான்
கதிரு குடலையிலே
கைசோர விட்டதென்ன

10. கடலோட கடலணைய
கப்பலோட நீரணைய
உன்னோடு நானணைய
இந்த ஊரவர் என்ன செய்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. காலால் நடந்தால்
கால் பாதம் நோகுமென்று
புல்லால் நடந்தேன் மச்சான்
இந்தப் புல்லும் இடம் தருவதில்லை

12. முல்லைச் சிரிப்பழகும்
மூக்கழகும் கண்ணழகும்
ஒல்லியிடையழகும் என்
மனதை விட்டு மாறுதில்லை

13. சோலைக்கிளியாரே
சுந்தரம் சேர் மச்சாளே
வாழாக் குமரியே
வந்திடவா வாழ் மனைக்கு

14. சந்திரனுக்கும் வடுவுண்டு
தாமரைக்கும் தடயமுண்டு
முத்துக்கும் சூத்தையுண்டு
மென்குழலாலுக்கு குற்றமேது

15. மாமன் வளர்த்த
மான் புள்ளிச் சேவலொன்று
தேத்தாவுக்குக் கீழே நின்று
சிறகு தட்டிக் கூவுதுகா



16. வாழைப்பழமெடுகா
வம்பரைத்தேனெடுகா
சாவல் வடிவெடுகா நாம்
மாமி வீடு போய்வருவோம்

17. வாழைப்பழமுமில்லை
வம்பரைத்தேனுமில்லை
சாவல் வடிவுமில்லை
மாமி வீடு போறதில்லை

18. பூவையரே மச்சி
பொரித்தரிசி நிறத்தாளே
சிரிச்சமுகம் காணாமல்
தவிக்கிறேன்டி உன்னாலே

19. சிரிச்ச முகமுண்டு
சிகப்புச்சோமன் சேலையுண்டு
விரிச்சிப் படுக்க பாயுமுண்டு
வாப்பாவும் திண்ணையிலே

20. இத்தி முத்தி இடை சிறுத்து
இளம் கமுகு பாளை தள்ளி
பாக்கு முற்றும் பருவம் மதினி
உன்னைப் பார்க்க வர நேரமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நெல்லுக்கதிரு
நெருங்கி விளைந்ததுபோல்
உன் பல் வரிசை மச்சி
பார்த்திருக்கக் கூடுதில்லை

22. அல்லையிலே பன் புடுங்கி
ஆவரணப் பாயிழைத்து
போட்டுப் படுக்க ஒரு
போடி மகன் பஞ்சமோ

23. அச்சடித்த புத்தகத்திற்கு
அரும்புகசை கட்டினதுபோல்
நெற்றிப்புருவம் என்
நித்திரையில் தோணுதுகா

24. கூந்தலழகும்
குறுஞ்சிரிப்புப் புன்னகையும்
நெற்றி இளம் பிறையும்
நித்திரையில் தோணுதுகா

25. பாலைப் பிளிந்தேன்
பழத்தைச்சுர மறுத்தேன்
சோற்றைப் பிசைந்தேன் என்
தொண்டையிலே இறங்குதில்லை



26. பதினெட்டுக் கட்டை
பறந்துழுந்து நான் வாறேன்
ஈரத்துளிரே மதினி என் எதிரே
வந்து நின்றாலென்ன

27. கோடைக்குப் பூத்த
கொடிமல்லிகைப் பூப்போல
காலமொருகாலம்
கடனளிக்க வாறதாக்கும்

28. மாதாளம் பூவே
மலை வாழ் நங்கணமே
சிங்கமகா ராசாத்தி
சிறையிருப்பதேன்

29. ஏறுபொழுதே
இறங்குமந்த சூரியனே
சிங்கத்தின் குட்டி
சிரிக்க இடம் வையாதே

30. கோபம் எழும்பி
கூரையில் வீசினாப்போல்
நாமம் பறந்து இப்போ
நடுத்தெருவில் நிற்குதுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஏழறையின் கீழறையில்
இருட்டறையில் கீழே வைத்து
பூட்டித் திறப்பெடுத்து
போய்ப்படுக்கார் எங்க வாப்பா

32. கூவும் பருவமில்லை
குஞ்சுவிடை கொள்ளவில்லை
பூமுளையாச் சேவல் கொஞ்சம்
பொறுதிசெய் கண்மணியே

33. ஆலம்பழங்கா
அழகில் அவள் லட்சுமிகா
பாலைப்பழங்கா அவளுடைய
பல்லழகு பார்க்கவொண்ணா

34. தங்கத்தால் சீப்பும்
தலைவார ஈருகொல்லி
வெண்கலத்தால் எண்ணெய்முட்டி
வேணுமென்றால் சொல்லுமகா





## ஆண் – பெண் VI

01. போட்டாவரம்பால
புறா மேய்ந்து போறதுபோல்
சாயலுள்ள பெண்ணே
தலை நிமிர்ந்து பாத்தாலென்ன

02. ஆரே அறியேன் என்
ஆசை மச்சி போலிருக்கு
மாமா அறியாமல் இங்கு
வந்த வழி சொல் கிளியே

03. மாமி மகளே எந்தன்
மதுரங்கிளி நங்கணமே
கூட வந்ததார் கிளியே
கோபிக்காமல் சொல்லிடுகா

04. செந்நெல் செழித்து
திரையிடும் இவ்வேளையிலே
கண்ணான மச்சி உன்னைக்
காணத்தவமென்ன செய்தேன்

05. புல்லு வனமறியாய்
புற்பூண்டு தானறியாய்
அல்லை அறியாய் நீ
அலைந்து வந்த தேன்கிளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வஞ்சிக்கொடியே
வருக்கைப்பலாக்கனியே
கொஞ்சும் கிளிமொழியே
கூசாமல் சொல்லிடுகா

07. நாணம் வருகுதாகா
நல்மனது இல்லையாகா
சோமன் வழுவுதாகா
சோகம் நீங்கி சொல்கிளியே

08. ஆற்றில் நீராடும்
ஆசையால் ஓடி வந்தேன்
மாமி மகன் காண
வழியுமுண்டோ வல்லவனே

09. பெரியதாய் தன்னுடன்
பின்தொடர்ந்து இங்குவந்து
காவல் பறன் காட்சி
கண்டிடவோ வல்லவனே

10. வாயைத் திறந்து
வந்தவிடம் சொல்லிவிட்டால்
முத்துப் பறந்து
முளைத்திடுமோ என்வயலில்



11. உங்களுக்கும் எங்களுக்கும்
ஒருபோதும் சண்டையில்லை
கன்னிப் பருவம்
கதைக்கத் தடையாயிருக்கு

12. மாமி மகளே
மருக்காலம் பூவழகி
பெருக்கப் பெருக்க
பேச மனஸ்தாபமென்ன

13. எண்ணக் கருத்தை
எடுத்துரைப்பேன் நாடறிய
வாழும் பராயம்
வதைக்குதல்லோ என்மனதை

14. அஞ்சாதே அஞ்சுகமே
ஆரணங்கே ஆமினாவே
வஞ்சியிளமாமயிலே
மச்சான் ஆதம் நானிருக்கேன்

15. தங்கக் கிளியே என்
தாய்மாமன் ஈன்ற கன்றே
ஆசைக் கனியே ஆதரவாய்
நானிருக்கேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அன்புக்குரிய என்தன்
ஆசையும்மா போன வழி
திக்குத் தெரியாமல்
திகைக்கின்றேன் கண்ணாளா

17. தன்னந்தனியே என்று
சஞ்சலங்கள் கொள்ளாதே
காவல் பறனில் கண்ணி
குத்திக் காத்திருக்கேன்

18. குஞ்சு குழந்தையிலே
கூடி விளையாடியதை
நினைந்து பார் கண்ணே
நினைவு வருமட்டும்

19. ஒன்றாயிருந்தோம்
ஒரு கல்லையில் சோறுதின்றோம்
ஓர் பாயில் படுத்தோம் இப்போ
பகை வந்த மாயமென்ன

20. உன்னை மறக்கவில்லை
உன் அன்பு மாறவில்லை
கண்ணான மச்சி காலம் நம்மை
காலகதியாக்கி விட்டதே



21. தங்க நிறமான மேனி
தாமரைப்பூப்போல முகம்
மங்குதுகா உன் ஒளி
மதிமயக்கம் தீர்ப்பதெப்போ

22. கற்கண்டே தேனே
கனிரசமென் கரும்பே
உன் கன்னங்கெளித்து
கதை கேட்பதென்னாளோ

23. காதல்வளருதுகா
காலங்கழியுதுகா
ஆசை பெருகுதுகா
ஆருடனோ சொல்லுவது

24. உன் கொண்டையழகும்
குறும்பு நகை புன்னகையும்
சோமனழகும் சுறுசுறுப்பை
ஊட்டுதுகா

25. உங்கள் மனதறிந்தேன்
உட்கருத்தும் தானறிந்தேன்
பொங்கு கடலே மச்சான்
பொறுமையுடன் காத்திருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. உன்மனதும் என்மனதும்
ஒன்றுபட்டுச் சம்மதித்தால்
ஊரொதுங்கி வந்தாலும் நம்மை
ஒன்றும் செய்யப்போவதில்லை

27. பட்சமிருக்கு மச்சான்
பலமுறையும் தானிருக்கு
எண்ணமிருக்கு நம்ம
எழுத்து வண்ணமெப்படியோ

28. மருக்காலம் சோலையிலே
மறுக்கிவிட்ட மானதுபோல்
தவிக்கிறேன் ராசா தாலி
கழுத்தேறுமட்டும்

29. நான் வந்து வெகுநேரமாச்சு
வாப்பாவும் ஏசுவாங்க
போயிற்று வாறேன்
பொறுத்திருங்கோ புண்ணியரே

30. போகட்டோ என்று
பொற்கொடியே நீ கேட்காய்
போவென்று சொல்ல
பொருந்துதில்லை என்மனது



31. பாயில் படுக்கவொண்ணா
பஞ்சணையில் தூங்கவொண்ணா
பள்ளவெளி வட்டைப் பறன்
நினைவு வாட்டுதுகா

32. சந்திரனைக் காணாது
தடாகமலர்பூத்ததுபோல
வாடுகிறேன் மச்சான் உன்
வண்ணமுகம் காணாமல்

33. தாமரையிலே
தங்கி நிற்கும் நீரதுபோல
உள்ளம் வருந்தி
உருகுகின்றேன் கண்ணாளா

34. குஞ்சி முகமும் கூருளுந்த
மொக்காடும்
நெற்றி இளம் பிறையும்
நித்திரையில் தோணுதுகா

35. அன்ன நடையழகும்
ஆயிளையால் சொல்லழகும்
மின்னலிடையழகும்
மேலும் மேலும் தோணுதுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ஆணாய்ப் பிறந்திருந்தால்
ஆலமெல்லாம் போய் வருவேன்
பெண்ணாய்ப் பிறந்ததினால்
பேதை என்ன செய்வேன்

37. உண்ணாமல் வாடவில்லை
உறங்காமல் வாடவில்லை
கண்ணான கண்ணே உன்னைக்
காணாமல் வாடுகின்றேன்

38. பாலைவனத்தில் பசித்தலையும்
மானதுபோல்
கானலில் சிக்கி கலங்குகின்றேன்
உன் நினைவால்

39. உன் தாலியழகும்
தசுப்பைக் கழுத்தழகும்
மையிட்ட கண்ணும்
மறந்திருக்கக் கூடுதில்லை

40. மாரியிடியில்
மணியிழந்த நாகம்போல
வாடுகின்றேன் கண்ணே
வண்ண முகம் காணாமல்



## ஆண் – பெண் VII

01. சட்டையைத் தைத்து
தனியே வரக்காட்டிருக்கார்
மோதிரமொன்று முடிந்து
வரக்காட்டிடாமல்

02. சட்டையும் பாவாடையும்
சரியாய்ப் பொருந்திருக்கு
மாமிமகன் மனப்பொருத்தம்
என்னவாமோ

03. சட்டையென்றால்
நல்ல சட்டை
தையலும் ஒத்தமூட்டு
சாயங்களறுமென்றால் சண்டைவரும்

04. விடிந்தெழும்பி கண் கழுவி
பிஸ்மில் சொல்லித் துவக்கெடுத்து
போறாரு மச்சான் ஒரு
பெட்டைமான் சுட்டுவர

05. குஞ்சித் தெருவால
குதிரையிலே போறமச்சான்
குலுங்கி வருந்தாமல்
சேர்ந்திருப்பதெக்காலம்

06. மாலை அனுப்பியிருக்கார்
மான்குட்டி தந்திருக்கார்
சேலை அனுப்பியிருக்கார்
சேர்ந்திருப்பதெக்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் – பெண் VIII

01. ஒல்லியின் பூவே
உயர்வான தாளம்பூவே
கண்டு வம்மிப்பூவே
கண்டு கனகாலமாச்சு

02. சந்தன மரத்தை சந்திக்க
வேண்டுமென்றால்
பூவலடிக்கு மச்சான்
பொழுதோட வந்திடுங்கோ

03. பாயை விரித்துப் படுப்போ
மென்று நான் போனேன்
உன் நினைவால் உருகினேன்
கண்மணியே

04. வாழைப்பழத்தையுண்டேன்
வம்பரையில் தேனையுண்டேன்
தாகம் தணியவில்லை
தாகிளியே சம்மதத்தை

05. தாகம் தெளித்திடுவேன்
சம்மதத்தை தந்திடுவேன்
சீதனங்கள் கேட்டு என்னை
சீரழிச்சுப் போட்டிடாதே



06. ஆதனமும் சீதனமும்
அழிந்து விடும் கண்மணியே
அன்பு கலந்தால் அது
அழியப் போறதில்லை

07. அன்பாகப் பேசி
ஆசை காட்டி மோசம் செய்து
என்னை மயக்கி
இழிவடையச் செய்திடாதே

08. அன்பை மறந்து
ஆதனத்தை நான் விரும்பி
அடிபணிந்து வாழும்
அபலையல்ல கண்மணியே

09. வானின் நிலவே
வட்டமுகச் சந்திரரே
அன்பின் கடலே
அனுதினமும் நான் நினைத்தேன்

10. கண்ணான கண்ணே
கதை பழகும் நங்கணமே
உன் கல்பைத் திறந்து
கதைத்திடு கண்மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கல்பைத் திறந்து
கதை பழக ஆசையுண்டு
காலங்கழியாமல் கட்டு
மச்சான் தலியை

12. முதிரை மரம் அரிந்து
மூன்றறையில் வீடு கட்டி
ஜன்னலும் பதித்து மச்சி நான்
எடுப்பேன் தப்பாமல்





## காசிம் - கதிஜா காவியத் தொடர்

கிழக்கிலங்கையிலே முஸ்லிம் கிராமியக்கவிகளால் பாடப்பட்டுள்ள கவிகளில் சமயா, சமயத்துக்கேற்ப பல பாடல்கள் பாடப் பட்டிருப்பதைப் போன்று சில சம்பவங்களையும் பின்னணியாகக் கொண்டு தொடரான சில கவிதைத் தொகுப்புகளும் உள்ளன. இதில் 'கிழவி பாடல்' என்னும் ஒரு பாடல் தொகுப்பு பல வருட காலமாக வாய்ப்பாடலாக இப்பிரதேசத்தில் பாடப்பட்டு வருகின்றது. இத்தகைய பாடல் தொடரில் ஒன்று இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் காதல், சீதனம், இளம் பெண்களின் கட்டுப்பாடுகள் பழக்க வழக்கங்கள் என்பல பண்புகளைக் காணலாம். சீதனம் என்னும் பழக்கம் எவ்வாறு இப்பிரதேச மக்களிடையே தீராத நோயாக உள்ளதென்பதையும் காணலாம்.

இத்தொடரில் காசீம் - கதிஜா என்னும் தொடர் கவிதை, கதைச் சித்திரமாக 1958ஆம் 1959ஆம் ஆண்டுகளில் இலங்கை வானொலியில் கிராமிய சஞ்சிகை நிகழ்ச்சியின் 13அதிகாரங்களை கொண்ட ஒரு தொகுப்பாக ஒலி பரப்பப்பட்டது. அதன் பின்பும் பல முறை இதன் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசைத்தட்டுக்கள் ஒலிபரப்பப்பட்டன.

இதில் காசிம் ஒரு போடியார் மகன். பெரும் சொத்து, நிலபுலன்கள், பண்ணைகளைக் கொண்ட நிலப்பிரபு. தம் தாய் தந்தையருக்கு ஏக புதல்வன். கதிஜாவும் தந்தையை இழந்த ஒரே பெண். இருவரும் சிறு பிராயத்து உறவிருந்தும் தம் சொத்துக்களைப் பராமரிப்பதில் காலத்தை செலவிட்ட காசிம் தன் மாமி மகளை இடைப்பட்ட காலத்தில் வளர்ந்து பருவமடைந்த பின் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியவில்லை. ஒரு நாள் த0ன் மாமி மகளை நினைத்து அவளைச் சந்திக்க வேண்டுமென்னும் எண்ணத்தில் மாமி மகள் வீடு தேடி வருகின்றான். அப்பொழுது இருவருக்கு மிடையே ஏற்பட்ட சம்பாசணையைக் கேட்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. தடதடவென ஒடிவந்து
தலைவாசல் தான் திறந்து
கதவில் தெறிக்க நீயார் பொடியா
ஓர் முறைக்கு

02. ஊரார் மகனென்று
உன் வாயால் ஏசிடாதே
மாமி மகன் வந்திருக்கேன்
மதிக்கல்லையோ கண்மணியே

03. மாமி மகன்தான்
மச்சான் முறையுமுண்டு
இன்னேரம் வந்து என்னை
எழுப்பக் காரணம் என்ன?

04. பாயை விரித்து படுப்போமென்று
நான் போனேன்
உன் நினைவு வந்து மச்சி
ஓடி வந்தேன் இன்னேரம்

05. சாமம் ஒறுக்கவில்லை
தலைக்கோழி கூவவில்லை
இன்னேரம் மச்சான்
என் நினைவு வந்ததென்ன



06. ஒன்றுக்குமில்லை மச்சி
உன்னை விரும்புறது
மடல் திறந்து உன்
வாச முஹர்ண வந்ததுகா

07. என்ன செய்வேன் மச்சான்
எழுந்து வந்திடுவேன்
கண்ணான வாப்பா இந்த
காம்பிராவில் போட்டடைத்தார்

08. ஆசைக் கடலே
ஆழகான பூமயிலே
கான மயிலே மச்சி
கதவு திற கண்மணியே

09. கதவு திறக்க கருத்துடனே
கூறுகின்றாய்
கடும் பூட்டு என் கதவு
கண்மணியே போய்விடு

10. வாழைப்பழமே
வடிவான முத்தே
ஈரத்துளிரே மச்சி
இரக்கம் வைத்துப்பார் மயிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பாலையும் தட்டி
பட்டிக் கயிறும் வைத்து
முட்டுக்கால் போட்டு
முறைகளத்த வந்திகளோ

12. அன்புக் கடலே
ஆழிக்கடல் முத்தே
ஈமானுக்குகந்த மச்சி
ஏந்திளையே கதவு திற

13. இந்த உலகம் புரண்டு
மறு உலகம் போனாலும்
கதவு திறப்பேனென்று
கடுகளவும் நம்பாதே

14. வடிவாலுயர்ந்த மச்சி
வங்கிசத்திலான மச்சி
ஈச்சம் கனி பழமே
ஏந்திழையே கதவுதிற

15. தேனமிர்தம் சீனி மச்சான்
தின்னரச மென்றிருக்காய்
ஆகாத சொல்லும் அவதூறும்
வந்து சேரும்



16. பூவரசம்பழுப்பழகி
பொன்னிறத்து மேனியழகி
காராம்பசு வழகி
கதவு திற கண்மணியே

17. மாமி மகள் தான்
மச்சான் முறைக்காறனும்தான்
ஆழமனம் வைத்திருக்காய்
ஆகாது தள்ளிவிடு

18. ஊரெல்லாம் பேய்குளற
ஒழுங்கையெல்லாம் நாய் குரைக்க
ஓடி வந்தேன் மச்சி உன்
நட்பெனக்கு வேண்டுமென்று

19. இந்நேரம் மச்சான்
ஏன் வந்தாய் என்னிடம்
பகலில் வந்தியென்றால்
பதுங்கியாலும் வந்திடுவேன்

20. சாமம் ஒறுக்குதுகா
தலைக் கோழி கூவுதுகா
ஆளும் பரிமாறுதுகா
ஆசை வண்டே போயிரட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வாருங்கள் என்று மச்சான்
வருந்தியழைத்திருந்தால்
போவென்று சொல்ல
பொருந்துமோ என் மனது

22. ஓடி வரும் நீரில்
உலாவிவரும் மீனது போல்
நாடி வந்தேன் மச்சி
நட்பெனக்கு வேண்டுமென்று

23. காமக் கடலில்
கைத்தோணி இருக்குமென்றல்
சாமத்துக் குச்சாமம்
சாலமுறைப்பேன் காலடியில்

24. மானமென்னும் கண்ணாடி
மங்காது ஒரு நாளும்
பூவிருக்கும் அல்ல சலுக்கு
பூச்சி எங்குருந்தும் தங்க வரும்

25. வாழையிலே குலையிருக்க
வாழ்மயிலால் சிறையிருக்க
சேனையிலே நான் இருக்க மச்சான்
செப்பெடுக்க சம்மதமோ



26. ஆழிக்கடலிலே அரிய திரவியமே
ஆணிமுத்தே அருந்தவமே
குரலின் சிரக்கொழுந்தே உன்
குரல் மதிக்கக் கூடுதில்லை

27. கூண்டுக்கிளியே என்
கதை பழகா நங்கணமே
கும்பகுலமே உன்
குரல் மதிக்கக் கூடுதில்லை

28. இந்நேரம் வந்து
ஏனவதி உங்களுக்கு
சந்தன மரத்தை சந்திக்க வேணுமென்றால்
பூவலடிக்கு பொழுதோட வந்திருங்கோ

29. சீவன் கிடந்து இந்த
சீமையிலே நானிருந்தால்
என் காலம் கிடக்குமென்றால்
கண்ணி குத்திக் காத்திருப்பேன்

30. கடலே இரையாதே
கானலே வீசாதே
நிலவே மறையாதே என்
நீல வண்டார் போகு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் தன் மாமி மகளைச் சந்திக்கச் சென்று முடியாமல் வீடு திரும்பிய காசிம் மறுநாள் கதீஜா சந்திக்கச் சொன்ன பூவலடிக்கு செல்கின்றான் அப்போது.

31. பூவ்லைத் தோண்டி
புதுக்குடத்தைக் கிட்ட வைத்து
ஆரம் விழுந்த கிளி
அள்ளுதுகா நல்ல தண்ணீர்

32. பத்திப்பதறி
பறந்துழுந்து நான் வாறன்
என்ட தாகம் தணிய மச்சி
தண்ணீர் தந்திடுகா

33. ஆற்றை மறித்து
அழகு வில்லுப்போட்டது போல்
என்னை மறித்து மச்சான்
என்ன கதை கேட்காய்

34. தங்கத் தகடே என்
தகதகத்த பொன் தகடே
வெள்ளித் தகடே மச்சி
விலை மதிக்கக் கூடுதில்லை

35. பூவலில் எடுத்த தண்ணி
பூச்சி விழும் தூசி விழும்
வீட்டவா மச்சான்
குளிர்ந்த தண்ணீர் நான் தருவேன்



36. ஒடி வருவேன்
ஒழுங்கையிலே தங்கி நிற்பேன்
உன்னை நினைப்பேன்· மச்சி
உங்கட வீட்ட வர நாட்டமில்லை

37. தண்ணீர் குடத்தை
தாவரத்தில் வைத்து விட்டு
புளக்கடையால் நான் வாறன்
பொறுத்திருங்கோ கொஞ்ச நேரம்

38. பொடு பொடுத்த மழைத் தூத்தல்
பூங்காரமான நிலா
இருட்டும் முன்னிருட்டும் மாலவள்ளி
முன்னதாக வந்திடுகா

39. கோடியால் நின்று
கொக்கரிக்காதே என் கண்ணே
வீடு நிறைந்த சனமும்
உம்மாவும் கூட இருக்கா

40. மனமும் மனமும்
மாறாமல் தானிருந்தால் என்
கூண்டுக்கிளியே மச்சி
எம்மையார் கண்டாலென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. என்டகையைப் பிடிக்கிறதும்
  கண்மணியே என்கிறதும்
சொக்கைச் சொறிகிறதும் மச்சான்
  உங்கட சொந்த நயத்துக்கோ

42. கடிதம் அனுப்பிரட்டோ
  கதைத்திருக்க வந்திரட்டோ
தூதுமனுப்பிரட்டோ
  சொல் கிளியே சம்மதத்தை

43. கடிதம் அனுப்பினாலும்
  கதைத்திருக்க வந்தாலும்
தூதுமனுப்பினாலும் மச்சான்
  சொல்லுவனோ என் சம்மதத்தை

44. தங்கக்கிளியே என்
  தகதகத்த பொன்தகடே
மையிட்ட கண்ணழகி
  மறந்திருக்கக் கூடுதில்லை

45. ஈரத்துளிரே
  இலங்குமந்தச் சூரியனே
மாதாளம்பூவே மச்சான்
  மணமுடிக்கச் சம்மதமோ



46. எப்படிச் சொன்னாலும்
  ஏற்குதில்லை உன் மனது
தலையிலடிச்சி மச்சி
  சத்தியம் தந்திடவோ

47. விரிந்த மலரில்
  வண்டு வந்து மொய்த்தது போல்
என் இதய மலரில் மச்சான்
  மொய்த்திருக்க காத்திருக்கேன்

48. கறுத்தக் கரும்பே
  கைநிறைந்த மோதிரமே
சீனெட்டி நெல்லே நாம
  சேர்ந்திருப்ப தெக்காலம்

கதிஜாவை விட்டுப்பிரிந்த காசிம் இரண்டொரு நாட்கள் தன் வயல் வேலைகளில் ஈடுபட்டு விட்டு மீண்டும் தன் காதலியைச் சந்திக்க வருகின்றான். அப்போது நடைபெறும் சம்பாசணையைக் கேட்போம்.

49. வீடும் உறக்கம்
  வெளியே நாயும் உறக்கம்
இந்த நாடும் உறக்கம் என் ராசா
  உன் நல்வரவைக் காணமல்

50. தாமரை இலையில்
  தங்கி நிற்கும் நீரது போல்
உள்ளம் வருந்தி
  உருகுகின்றேன் கண்ணாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. மாரியிடியில்
மணியிழந்த நாகம் போல்
வாடுகிறேன் மச்சான்
வண்ண முகம் காணாமல்

52. சந்திரனை காணாத
தடாக மலர்பூவது போல்
வாடுகிறேன் மச்சான்
வண்ண முகம் காணாமல்

53. சுற்றி வர வேலி
சூழவர முள் வேலி
எங்கும் ஒரே வேலி
எங்காலே வந்திடட்டும்

54. காவலறனோ மச்சான்
கள்ளனுக்கு முள்ளறனோ
வேலியறனோ மச்சான்
வேணுமென்ற கள்ளனுக்கு

55. அந்தி விடிந்து அனுதினமும்
ஓடி வாறாய் மச்சான்
யாருமறிந்தால் எனக்கு
அவமானம் வந்திடுமே



56. யார்தான் கண்டு
என்னதான் பேசினாலும்
உன்னை ஏற்றெடுப்பேன்
உனக்கென்ன பயம் கண்மணியே

57. பட்ட மரத்தில்
பழமிருந்து என்ன செய்ய
இலையிருந்து காத்தடித்தால்
கிளி எங்கிருந்தும் தங்க வரும்

58. தோட்டத்து மாம்பழத்தை
துரை மகன் தின்னாமல்
வேறொருவன் தின்ன மச்சி
விரும்புமகா உன் மனது

59. வெள்ளி படுகுதுகா
விடியச் சாமம் ஆகுதுகா
கோழியும் கூவுதுகா என்
பொற் கொடியே போய்வாறன்

60. வாறனென்று வந்தால்
வாசலெல்லாம் ஓர் மணம்
போறனென்று போனல்
ஒரு பூப்பூத்து ஓய்ந்தது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. கதையழகி நடையழகி
நாக சித்திர வடிவழகி
நெற்றி இளம் பிறையும் என்
நினைவை விட்டு மாறுதில்லை

தன் மாமி மகன் தன்னை அடிக்கடி சந்திப்பது சமூகத்தினிடையே தப்பெண்ணமும் அவதூறும் வீண் பழிச்சொல்லும் ஏற்பட்டு தன் வாழ்வு சீரழிந்து விடுமோ என எண்ணியவள் தன் மச்சானின் தாயிடம் சம்மதத்தைப் பெற்று ஊரும் உலகுமறிய திருமணத்தை முடிக்கலாமென எண்ணி மாமியிடம் தன் தாயைச் சென்று சம்மதத்தைப் பெறக் கூறுகிறாள். பதிலாக.

62. உண்ட மாமா இருந்தால்
மனங்குளிர பேசிடுவார்
அந்த மூளியலங்காரி மகளே
முகம் கொடுத்தும் பேசாளடி

63. அன்பாகப் பேசி
ஆதரிக்காவிட்டாலும்
கேட்குமந்த கேள்வியை
கேட்டுவாகா சீக்கிரமாய்

கதிஜாவின் வேண்டுதலுக்காக காசிமின் தாயிடம் சென்று தன் மகளின் திருமணத்திற்கு சம்மதத்தைக் கேட்கிறாள். காசிமின் தாய் இம்மியும் இடம் கொடாமல் சீதனம் கேட்டு தடை போடுகிறாள்.

64. மூன்று காம்பிராவீடும்
மூவாயிரம் காசும்
காணியும் தந்தாயென்றால்
தந்திடுவேன் சம்மதத்தை



65. காணி பணமும் கன மாடு
கன்று தானுமில்லை
எண்ட வீடு மட்டும் தானிருக்கு
விருப்பமென்றால் சொல்லுமகா

66. எத்தின் பரதேசியென்று
எண்ணிடாதே என் மகனை
சீதனம் இல்லாமல் என்
செல்வ மகனை மணமுடிக்க

67. ஆயிரம் நூற்றை
அள்ளித்தாவென்று கேட்கவில்லை
எண்ட அண்ணன் மகனை
அன்பாக தந்துவிடு

68. இந்த உலகம் உருண்டு
பிரண்டாலும்
உன் மகளை மணமுடிக்க
ஒரு நாளும் சம்மதியேன்

காசிமின் தாய் கேட்ட சீதனம் கொடுத்து நிறைவேற்ற முடியாத இத்திருமணத்தை விட்டு விடும்படி தன் மகளுக்கு புத்தி கூறுகிறாள்.

69. கன்று மகளே
கனி தரும் ஆணிமுத்தே
உண்ட மாமி மகனை
மறந்து விடு கண்மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. இந்த உலகம் முடிந்து
இறுதி நாள் வந்தாலும்
மாமி மகனை உம்மா
மறப்பேனா இப்பூவுலகில்

71. உன் மாமி கேட்ட சீதனத்தை
மனம் திறந்து சொன்னேனென்றால்
கிறு கிறுப்பு வந்து
கிறுகி விழுவாய் இவ்விடத்தில்

72. சீதனமில்லாமல்
சிறப்பாய் மண முடிக்க
மாமி மகன் மச்சான் உம்மா
வாக்கெனக்கு தந்தாரேகா

73. உன் மாமி கதைத்த
கதையெல்லாம் மனதிலிருக்கு
நினைக்க நினைக்க என்
நெஞ்சு மிக வெடிக்குதடி

74. என்னை கொன்று தான்
போட்டாலும்
கொலை களவு செய்தாலும் மச்சானை
மறவேனும்மா ஒரு நாளும்



75. சீனிரசத்தை தேனமிர்த
மென்றெண்ணுதே
கிட்டாத இச்சம்மதத்தை
வேணாமென்று தள்ளி விடு

76. சீனி ரசத்தை சிற்றெறும்பு
தானறியும்
வாழை மடல் தின்ன வாற
மாடறியப் போவதில்லை

வழமை போல் காலையில் வயல் வேலைக்குச் சென்ற காசிம் மாலையில் வீடு திரும்பினான். உணவருந்திய பின் உறங்கச் சென்றான். உறக்கத்தின் இடையே கண் விளித்த காசிம் தன் வீட்டில் தாயும் வேறு சிலரும் பேசிக் கொண்டிருப்பதை செவிமடுத்த காசிம், மாமியும் தன் தாயும் தன் திருமணத்தைப் பற்றிய உரையாடலில் ஈடுபட்டிருப்பதையும் தன் தாயின் மனக்கருத்தை அறிவதற்கான ஒரு சந்தர்ப்பமென எண்ணி நித்திரை செய்வதுபோல் பாசாங்கு செய்து கொண்டான். சீதனத்தால் தன் திருமணம் சீரழியப்போகிறதென்ற மனக்கவலையுடன் படுத்துக்கொண்டான். காலையில் கண் விழித்ததும் காலைக் கடனை முடித்து உணவருந்திய பின் தன் தாயிடம் இரவு நடந்த சம்பாசணையின் விபரத்தைக் கேட்டறிகிறான்.

77. இரவு சரி சாமம் நான்
படுக்குமந்த வேளையிலே
மாமியும் நீங்களும் கதைத்த கதை
என்னவென்று சொல்லுமகா

78. உன் மாமி மகளை உனக்கு
மணமுடிக்க வென்று சொல்லி
கேட்க வந்திருந்தா அவட
கெழுமதியைப் பாத்தியடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. மாமி மகளை உம்மா
மனம் குளிரக் கண்டாயென்றால்
காசி கொடுத்தாகினும்
கை விலைக்கு வாங்கிடுவாய்

80. வேறு குலத்தில்
வெள்ளாட்டி வைத்தாலும்
மாமி மகளை மறந்திடு
கண்மனியே

81. காசி பணமும் கனமாடு கண்டும்
தேடிடலாம்
மாமி மகளைப் போல் உம்மா
வாங்கவொண்ணா ஒரு நாளும்

82. அழகும் வடிவும் ஆகாது
ஒரு நாளும்
காசிபணமிருந்தால்
காலடியில் வந்து சேரும்

83. ஊரிலுள்ள பெண்ணையெல்லாம்
ஒன்று சேர்த்துப் பார்த்தாலும்
மாமி மகளைப் போல் உம்மா
மனம் பிடிக்கவில்லையேகா



84. மாமி மகளை மணமுடிக்க
வேண்டுமென்றால் என்
சீவனைச் சீக்கிரமாய்
போக்கிவிடு

85. தகப்பனில்லாப்பிள்ளை
தனியே இருக்கிறதைப் பார்த்து
என் நெஞ்சமெல்லாம் உம்மா
நெருப்பாக எரிகிறதல்லோ

86. என்னையறியாமல்
ஏதாகிலும் செய்தாய் என்றால்
கட்டாயம் மகனே நான்
கடலில் விழுந்திடுவேன்

87. கடலில் விழுந்தாலும்
கைசேதப்பட்டாலும்
மாமி மகளை மணமுடிப்பேன்
கட்டாயமாய்

88. காமப்பிசாசை
கை விலைக்கு வாங்கிடாமல்
வீசியெறிந்து விட்டு
வேறு பெண்ணைப்பார் மகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. மாமி மகளை மடியில் வைத்து
சிரித்து விளையாட உம்மா
சிறுசில் வைத்த
எண்ணமல்லோ

90. உன்ட ஆசையை அடக்கி
அவளை மறந்து விட்டு
வேறு பெண்ணை விரும்பி
மணமுடியுமடா

91. கொண்டையழகும்
குறும் சிரிப்பு பல்லழகும்
நெற்றி இளம் பிறையும்
நெஞ்சை விட்டு மாறுதில்லை

92. என்ட இரணம் ஒழிந்து
எழுத்தோலை கிழித்தாலும்
மவுத்தாகுமட்டும் நான் விடேன்
அவளிடத்தில்

93. வெள்ளியொடு தங்கம்
அள்ளிச் சொரிந்தாலும்
வேறெருவனுக்கு உம்மா
வாழ்கைப்படமாட்டாளகா



94. பஞ்ச வர்ணக்கிளி போல்
பார்த்திருக்கேன் பெண்ணுனக்கு
ஏந்து மணமுடித்தால்
நீ இருப்பாய் சந்தோசமாய்

95. மாமி மகளை உம்மா
மனதில் நினையா விட்டால்
உண்ணுகிற சோறு
உடலில் தங்குதில்லை

96. பத்து மாதம் சுமந்து
பாடு பட்டு நான் வளர்த்து
பரதேசியிடம் விட மகனே
பதறுதடா என் மனது

97. அரசாங்க முத்திரை
அச்சழிந்து போனாலும்
என்ட மனதிலுல்ல ஆசை
மாறாது ஒரு நாளும்

98. மாமி மகளை மணமுடிக்க
வேண்டுமென்றால்
சீவனுள்ள மட்டும் மகனே
சிறையிருக்க வேணுமடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99. கடலென்றால் நீர்வற்றும்
கல்லென்றால் வாய் பிளக்கும்
இரும்பும் உருகி விடும உம்மா
உன் நெஞ்சமென்ன வைரமோ

100. வேப்பமரம் பூத்து
விடியச் சொரிந்தது போல்
கோப்பையிலே வாத்த தண்ணீர்
குடியாமல் எங்கு போறாய்

101. போறனும்மா நீ புத்தி
சொல்லத் தேவையில்லை
சீவன் கிடந்தால் வந்து
சொல்வேன் போனவிடம்

கதிஜாவுக்கும் காசிமுக்கும் இடையேயுள்ள காதல் பரிசுத்தமானது, நேர்மையானது, அந்தரங்க சுத்தியுள்ள காதல் வெறும் மாயாஜாலத்தில் அல்லது ஊடல் தொடர்புடையதாக இருக்காமல் ஒருவரை ஒருவர் உள்ளன்பால் நேசித்தனர். ஊர் அறிய உளகறிய ஒன்றுபட வேண்டு மென்றிருந்தமையால் பரிசுத்தமான இவர் தம் காதல் வளர்பிறை போல் வளர்ந்து வந்தது. சமூகத்திலுள்ள புல்லுருவிகள் கட்டுக்கதைகளையும் அவதூறுகளையும் பரப்பிவிட்டனர். தன் ஒரே மகளை ஊரில் பரவியிருந்த வதந்திகள் கதீஜாவின் காதுக்கு எட்டாமலில்லை. இதனையே தன் மகனிடம்.

102. ஊரெல்லாம் அவதூறு
ஒழுங்கையெல்லாம் உன் கதை
இரவெல்லாம் தூக்கமில்லை மகளே
என் தலையெழுத்துப்படியோ



103. வந்து வழி செய்வார்
வம்புக்கு இடம் வைக்க மாட்டார்
பூத்த மரம் காய்க்குமென்றால்
ஒரு பூவலொன்று தஞ்சமகா

104. கடலில் விழுந்திரேட்டோ
கை சேதப்பட்டிரட்டோ
அலைக்கலைதான் போயிரட்டோ
அவதூறு கேட்காமல்

105. ஆழியிலே தண்ணீர்
அள்ள எண்ணியிருந்தேன்
பாழி முதலை போல் உம்மா
மாமி பழி வாங்கிப்போட்டாவோ

106. சிறையில் இருந்து
சீரழியத் தேவையில்லை
வேறொரு மாப்பிள்ளையை
விரும்பி மணமுடியுமகா

107. தங்கக்கலமெடுத்து
சாதிலிங்க மை போட்டு
அன்பு வைத்தெழுதிருக்கேன்
அவர் வந்திடுவார் சீக்கிரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாயிடம் எவ்வளவு எடுத்துக் கூறியும் இணங்கிவராமையால் வீட்டை விட்டு வெளியேறிய காசிம் மனநிம்மதியற்றவனாக கதிஜாவின் வீட்டை நோக்கி வருகிறான். கவலையைக் கண்டறியாத சிட்டுக்குருவியாய் வானம் பாடியாய் பாடித்திருந்த கதீஜாவின் வாழ்க்கையில் புயல் வீசத்தொடங்கியது. தன் காதல் நிறைவேறுமா என்னும் கவலையின் மத்தியில் தாயின் கண்டிப்பு, ஊரவரின் சாபச் சொல் எல்லாம் சோர்ந்து நிம்மதியற்ற கடலாக மனம் கொந்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில் காசிமைக் கண்டதும்,

108. ஐந்தாறு நாளாய்
அழுது படுத்திருக்கேன்
இன்றைக்கு மச்சான்
எப்படித்தான் வந்தீர்களோ

109. அந்த இந்த வேலையென்றால்
அனுதினமும் வந்திடுவேன்
மாட்டுப் பொறுப்பு மச்சி
வந்து போக நேரமில்லை

110. உங்களைத் தான் மச்சான்
ஒரு நாளும் கேட்கவில்லை
ஏழை பரதேசி என்னை
என்ன செய்யப்போறிங்க

111. உன்கையைப் பிடித்து
கழுத்திலே தாலிகட்டி
என்ட மனதுக்குகந்த
மனைவியாக்கப் போறேன்



112. ஊத்தை பிடித்த செம்பு
உதவமால் போகமட்டா
பூசின செம்பு ராசா
பொருந்துமோ பொருந்தாதோ

113. பொருந்தாத சாமானுக்கு
பொறுத்திருக்கத் தேவையில்லை
வேணாமென்று சொல்லி மச்சி
வேறு பெண் பார்த்திருப்பேன்

114. உம்மாவுக்கு ஒரு பிள்ளை
உடையோன் கொடுத்த கனி
உள்ள பொருளெல்லாம்
சேர்த்திருக்கேன் உங்களுக்கு

115. சத்தியத்தில் ஒன்று பட்டோம்
சமநிலையில் வேறுபட்டு
கோதில்லா அன்பை மச்சான்
குலைக்காவே உங்கும்மா

116. எங்கும்மாவின் சொல்லை
ஒரு நாளும் நான் கேளேன்
சத்தியமாய் மச்சி நமது
சபதம் நிறைவேறும் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117. காத்தொன்றடித்து
கந்தொன்று முறிந்தது போல
வாது வந்த மட்டிலையும்
வாக்களிப்பேன் கட்டாயம்

118. என்ட வாடாமலரே
வளருமந்த சூரியனே
இரக்கமுள்ள சீதவியே
இந்நேரம் வந்ததென்ன

119. இரவு சரிசாமம்
படுக்குமந்த வேளையிலே
என்ட கண்ணான மச்சி
கதைத்திருக்க கண்டேனகா

120. அந்த இந்தக் கனவென்று
யாரிடமும் சொல்லிடாதே
வாலிப வயதில் மச்சான்
வரும் வியாதிதான் வேறில்லை

121. எந்த வியாதியும் எனக்கு
வந்ததில்லை ஒரு நாளும்
உன் நினைவால் உண்டுபட்ட
வருத்தமேதான்



122. ஆரோ ஒருத்தி
அழகான பெண்மயிலில்
கண்டு மையல் கொண்ட
கனவுதானே நானறியேன்

123. வாழாக்குமரியே உன்னை
வழியில் கண்ட நாளிருந்து
கண்டு கதைக்கா விட்டால் என்ட
கல்பு தடமாறுதுகா

124. பட்சமிருக்கு
பறக்கச்சிறகிருக்கு
எண்ணமிருக்கு நம்மிட
எழுத்து வண்ணமெப்படியோ

125. புத்தியும் கருத்தும்
புது வாழ்வும் நான்தாறன்
எள்ளளவும் மச்சி
ஏங்கிமனம் சலியாதே

126. அறுசி குறுசானேன்
ஆழ்கடல் நீரானேன்
கூண்டுக்கிளியானேன்
எனக்குற்ற துணையாருமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. புள்ளி மான் கன்றே
பிற நாட்டு முத்தே
வங்கிசத்திலுள்ள மச்சி
மன வருத்தம் வையாதே

128. கோழியும் குஞ்சும்
கூட்டிலடையப்பட்டது போல்
தாயாரும் நானும் மச்சான்
தனியேயிருந்து வாடுகிறோம்

129. கூடியிருக்கிறோம்
குப்பியிலிட்டமையது போல
குப்பியுடைந்து மை சிதறினாலும்
கூடுவோம் சீக்கிரமாய்

130. பச்சைக்கிளியே
பாக்கரிந்து தந்த செப்பம்
காத்துக் குதிர்ந்த
கமுகம்பூ என்றிருந்தேன்

131. பகலில் வந்து நான்
பாக்கரிந்து தந்தேன் என்பதை
தாயார் அறிந்தால்
தப்பாகவல்லோ எண்ணிடுவா



132. பற்றை இடறி
பசுமாட்டில் கொண்டுழுந்து
இருட்டறுத்து வழி நடந்து
வந்தேன் வண்ண முகம் காண

133. வாழை மரத்தை வண்டறுத்து
சாய்த்தது போல் என்ட
வாழ்வுக்கடலை மச்சான்
பாழ்படுத்திப் போட்டுடாதே

134. ஆகாயத்தில் வெள்ளியும்
அந்தியில் சாய்ந்து
மழையும் இருட்டுது
மால வள்ளி நான் போறேன்

தணியாத மனத்தாங்களுடன் வீட்டை விட்டு வெளியேறிய காசிம் தன் மாட்டுப்பட்டியையும் வயல்களையும் பார்வையிட்டு வழியில் தன் காதலியையும் கண்டு கதைத்து வீடு திரும்பினான். இடையே இரண்டொரு தினங்கள் வீட்டுக்கு வெளியே தங்கியமையால் மனவேதனை சிறிது தணிந்தாலும் தன் தாயின் மனதில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அலசிப்பார்க்கின்றான்.

135. ஏழைக் கிரங்கி
இனியாலும் மனமிரங்கி
வாழ்வைக் கொடாமல்
ஒரு வழி செய்கா சீக்கிரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. மாமி மகளைப் போல்
மருங்கு கெட்ட பெண்ணுடன்
சீவனுள்ள மட்டும் மகனே
சேரவிடேன் ஒரு நாளும்

137. விதியென்று சொல்லி
விரட்டிடாதே என் தாயே
மாமி மகள் மச்சியை
மணமுடிக்கச் சம்மதிகா

138. கதைப்பார் கதைகள்
கல்லுருகி நெல்விளைய
சிரிப்பால் கொடுப்பாள் அவள்
சொல்லையுமா நம்புறது

139. கோபத்தை அடக்கி
கொஞ்சம் பொறுதி செய்து
ஆராய்ந்து பார் தாயே
ஆருடைய குற்றமென்று

140. வாழைப்பழம் போல
வடிவான பெண்ணிருக்க
மானமில்லாப் பெண்ணை
மனம் வையாத கண்மணியே



141. நாளை ஒரு காலம்
நஞ்சு தின்று சாகிறதை
பார்த்தாலும் உம்மா
பதறுவாய்கா எந்நாளும்

எவ்வளவுதான் எடுத்துக் கூறியும் கெஞ்சிக் கேட்டும் தன் தாயின் மனதை மாற்ற முடியவில்லை. எப்படியாயினும் தாயின் மனதை மாற்ற வேறு வழியேதும் உண்டா எனச் சிந்தித்து கடைசியாக மந்திரதந்திரங் களைக் கொண்டு மனதை மாற்றலாமா என எண்ணி ஊரிலுள்ள ஒரு மந்திரவாதியிடம் சென்றான். காசிமின் தாய் ஒரு பணக்காரி பெரிய ஆணவக்காரி என்பதால் இது விடயம் காசிமின் தாய் அறிந்தால் தனக்கு பெரும் ஆபத்து ஏற்படலாமென்பதை உணர்ந்த வைத்தியன் மறுத்து விடுகின்றான்.

142. காசிபணமும் காளமாடு கன்றும்
நீ தந்தாலும்
உங்கம்மாவுக்குத் தம்பி
ஊறு செய்ய மாட்டேனடா

143. மனதை மாற்ற
மந்திரங்கள் செய்தேனென்றல்
உங்கும்மா அறிந்தால் இந்த
ஊரிலையும் வைக்கமாட்டாளடா

144. அந்த இந்த வருத்தமென்றால்
அடியோடு மாற்றிடுவேன்
மனதிலுள்ள மன வடுவை
மாற்றுவது எவ்விதமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாயின் மனக்கருத்தை மாற்றுவது இனி எந்தச்சக்தியாலும் முடியாது. தன் காதலும் நிறைவேறுவது சுலபமான காரியமும் இல்லை என்பதை உணர்ந்து மனச்சோர்வுடனும் மனப் போராட்டத்துடனும் தன் காதலியைச் சந்திக்கச் செல்கின்றான். அப்போது இருவரும் சந்தித்து பரிமாறும் கருத்தினைக் காண்போம்.

145. வட்ட முகத்தழகா
வடிவான சீதேவியே
சோர்ந்த நிலவைப் போல
முகம் வாடிப்போனதென்ன?

146. என்ட தாயாரிடம்
தன்மையாய் கேட்டுவிட்டேன்
இன்னமும் மச்சி
எப்படித்தான் கேட்பதுகா

147. பூவுலகத்து வாழ்வு மச்சான்
புறக்கணித்துப் போட்டாலும்
ஆகிறத்து வாழ்விலேனும்
அல்லாஹ் நம்மை ஒன்று சேர்ப்பான்

148. வஞ்சிக் கொடியே
மன வருத்தம் வையாதே
ஆதியறிய நான் உன்னை
அடையாமல் சாகமாட்டேன்



149. கோழிக்குக் குஞ்சிணக்கம்
கோயிலுக்கு சங்கிணக்கும்
என்ட மாமி மகன் மச்சானுக்கு
நானிணக்கமில்லயாமோ

150. மானுக்கு புள்ளியிணக்கம்
மயிலுக்கு தோகையிணக்கம்
என்ட மாமி மகள் மச்சியுனக்கு
நானிணக்கமில்லையாமோ

151. சாயம் குறைந்து
சங்கை கெட்டுப் போகமாட்டா
சீவனுள்ள மட்டும் ராசா
உனக்கென்ன குறையென்னிடம்

152. மங்கா விளக்கேற்றி
மடியில் உன்னை வளத்தாட்டி
கொஞ்சி மகிழாத குறையிருக்கு
என்ன குற்றம் செய்து விட்டேன்

153. மாமிட பெட்டகத்தில்
மகிழம்பு பட்டெடுத்து
குலைத்துடுக்க மச்சான் நான்
குழந்தையிலே வைத்த ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154. குந்தி இருந்த இடம்
குறும் சிரிப்பு விட்ட இடம்
அன்பை வளர்த்த இடம்
அலறுதுகா உன்னைக் காணாமல்

155. குங்குமப் பூப்பூத்து
கொட்டிணண்டு போனதுபோல்
என்ட வாசமுள்ள ரோசாவே
மனம்மாறாது ஒரு நாளும்

156. வாழைப்பழமே
வருக்கைப் பலாவே
மானமென்னும் கண்ணாடி
மங்கிடுமோ

157. அரசமரமானேன்
அடிக்குமந்தக் காத்தானேன்
சருகு நிறமானேன் மச்சான்
என்னை அதரிப்பார் யாருமில்லை

158. நாயனுக்குகந்த கனி
நல்ல மாமி பெற்ற கனி
ஏன் நினைக்கின்றாய்
நெஞ்சிலுள்ள வெஞ்சமெல்லாம்



159. என்ட மாமி மகனே
மச்சான் முறைக்காறா
மறப்போமென்றால் உன்னை
ஒரு நாளும் மறக்கக் கூடுதில்லை

160. தேனே கனியே
தெவிட்டாத திரவியமே
தித்திக்கும் சக்கரையே மச்சி
நினைவு மாறுதில்லை என்ன செய்ய

161. கடலுக்கலங்காரம்
கப்பலும் பாய் மரமும் தான்
மனைக்கலங்காரம்
மாமி மகன் மச்சான் தான்

162. தாயார் வயிற்றில்
தரிக்குமந்த வேலையில்
வாதாடிக் கேட்ட
வரத்தை நானறியேன்

163. ஆதி எழுதினதை
அன்னேரம் கண்டேனென்றால்
கலத்தைப்பறித்து மச்சான்
கடலில் வீசிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. காட்டிலிருந்து கலை மான்
வந்தெதிர்த்தது போல்
என்ட கண்ணில் ஏன் வந்தெதிர்த்தாய்
ஏழை மனம் பேதலிக்க

165. அன்ன நடையழகும்
அலங்காரக் கை வீச்சும்
நெற்றியழகும் மச்சான்
நெஞ்சை விட்டு மாறுதில்லை

166. சங்குமறுவும்
சரிந்துழுந்த தேமலும்
கேலிக்கதையும் மச்சி
கிறு கிறுக்க வைத்ததுகா

167. கட்டிலில் நீ இருக்க
கதவோரம் நானிருந்து
பட்டால் முகம் துடைத்து
பார்க்க வெகு ஆசை வைத்தேன்

168. உன்ட கையைப்பிடித்து
கட்டிலிலே இருத்தாட்டி
சரசம் விளையாட மச்சி
எண்ணிருந்தேன் கொள்ளை எண்ணம்



169. குத்துவிளக் கெரிய
குமரன் கவி பாட
பாலன் விளையாட மச்சான்
பார்க்க வெகு ஆசைவைத்தேன்

170. காவினெழுதி
காவின்களறி நிறைவேறி
சோபனம் சொல்வதைக்காண
சோட்டை வைத்தேன்

171. குமராய் இருந்து
குரங்காய் போனலும்
வேறெருவனுக்கு மச்சான்
வாழ்க்கைப்படப் போறதில்லை

172. இத்தனை நாளாய்
எண்ணிமனம் பொறுத்து
நம்பிருந்தேன் மச்சி உன்னை
நாடாமல் சாக மாட்டேன்

காசிமும் கதிஜாவும் தம் பரிசுத்தமான காதலை பெற்றோரின் சம்மதத்துடன் சந்தோஷமாகவும் ஊரறிய, உலகறிய எல்லோர் முன்னிலையிலும் நிறைவேற்றிக்கொள்ள முற்பட்டனர். ஆனால் அது பகற்கனவாகவே தோன்றியது. இருவரின் உள்ளங்களும் தம் திருமணத்தையும் எதிர்கால வாழ்வினையும் எண்ணாத எண்ணங்களை எண்ணி ஆயிரம் மனக்கோட்டைகளையும் கட்டியிருந்தனர். இளம் கன்று பயமறியாது போல் இவ்வுலகமென்னும் துன்பக்கடலில் நீந்திக்கரை சேர எண்ணினர். இடையே ஏற்பட்ட கடல் கொந்தளிப்பும் புயலும் அவர்களை தடம் புரளச்செய்து விட்டதைக் கவிதையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

173. சித்திரத்தை வெட்டி
சுவரில் பதித்தது போல்
ஒப்பனைக்கோ மச்சான்
ஓடி ஓடி வாறிங்க

174. ஓடி வந்து ஒரு தரம்
உன்னைப் பாராவிட்டால்
பைத்தியம் போல் வந்து
பதறுதுகா என்மனது

175. பத்து வருடம் பராச்சிறை
இருக்கேன்
இன்னமும் சிறை இருக்க
இயலுமோகா

176. மாலக்கொடியே
மாமி பெற்ற மாங்கனியே
சீவன் கிடந்தால் உன்னை
சிறை மீட்பேன் தப்பாமல்

177. உயிரோடிருந்தால் மச்சான்
ஒன்று பட்டு வாழ இயலாது
இறந்து மடிந்தால் எம்மை
இறைவன் ஒன்று சேர்ப்பான்



178. மானுக்கு புள்ளி
மயிலுக்கு நாகபடம்
பூவுக்கு வெள்ளை மச்சி
பொறுத்திடுகா கொஞ்ச நாள்தான்

179. ஏழை பரதேசி
என்னை மறந்து விட்டு
வேறொரு பெண்ணை மச்சான்
விரும்பி மணமுடியுமகா

180. பணக்காரப் பெண்கள்
பல பேர் காத்திருக்க
என்னை மணம் முடிக்க மச்சான்
இடம் தருமோ இப்பூவுலகம்

181. பணத்தாசை பிடித்து
பதறியலையவில்லை
ஏழை பரதேசியைத்தான்
ஏற்றெடுக்க காத்திருக்கேன்

182. ஏழை இவளென்று
எழுதிருக்கோ உன்னுடலில்
வீணாக மச்சி என்னை வேணுமென்று
வேதனை செய்யாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183. காவினெழுதும் காதியாரிடம்
கேட்டுப்பார் மச்சான்
நம் காரியம் கை கூடுமோ
என்று சொல்லி

184. காதியாரின் காலைப்பிடித்தாலும்
எங்கும்மாவின் முடிவில்லாமல்
உருப்படாது ஒரு காரியமும்
கண்மணியே

185. எல்லாம் எதிரி
இலைகுளையும் தானெதிரி
புல்லும் எதிரி மச்சான்
ஏனிருக்கோம் இப்பூவுலகில்

186. சாக மருந்து சத்தியமாய்
வாங்கிருக்கேன்
குடித்து நானிறப்பேன்
குடிபதியாய் வாழ்ந்திடுகா

187. எத்தீன் பரதேசி நான்
எப்படிப் போனாலும்
என்ட கண்டு மச்சான் நீ
கன காலம் வாழ்திடுகா



188. நாளைக்கு இந்நேரம்
வாங்கி வருவேன் சாமானொன்று
கட்டாயம் மச்சி
வந்திடுகா பார்ப்பதற்கு

மறு நாள் கதீஜா தன் காதலன் அருமை மச்சான் வரச்சொன்ன படி அந்த இடத்துக்கு வருகிறாள் காசிமைச் சந்திக்க.

189. அன்புத்துரையே
அழகான சீதவியே
இனிக்குமந்தச் சக்கரையே
என்ன சாமான் வைத்திருக்காய்

190. வேறொரு மாப்பிள்ளை
விரும்பி மணமுடித்தியென்றால்
சந்தோஷமாய் இருப்பாய் மச்சி
நான் சாகிறது தப்பாதுகா

191 தாமரையில் வண்டுழுந்து
தண்டறுந்து போனது போல்
என்ட வாழ்வறுந்து போச்சி மச்சான்
நான் வாழ்வேனா உன்னை விட்டு

192. ஏழை இருந்து எந்நேரமும்
அழுத கண்ணீர்
குத்தியில் வைத்து மச்சான்
குளிப்பாட்டக் காணுமகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193. எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணிமனம் வருந்தி
அழுது குளறினாலும் மச்சி
நம்மை ஆதரிப்பார் யாருமில்லை

196. இந்த உலகில் இன்னமும்
நாமிருந்து ஒன்று பட்டு
வாழமுடியாது மச்சான்
ஓடிடுவோம் வேறுலகம்

197. ஆலமரத்தடியில் அந்திபட
வந்திருப்பேன்
என்ட சீனத்துக் கிளியே
சீக்கிரமாய் வந்து விடு

198. கடலாச்சிப் பழத்தில்
கடும் சிவப்பேறினது போல்
சொண்டு சிவந்த மச்சி
சுணங்காமல் வந்து விடு

காதலர் இருவரும் தம் மனக்கருத்தை வெளிப்படுத்தினார்கள். உள்ளத்தை திறந்து காட்டி தம் பரிசுத்தமான காதல் இனிமேல் நிறைவேறுவதற்கு ஒரு வழியும் இல்லை. ஆதலால் இவ்வுலகில் இருப்பதைவிட இறப்பது மேல் என்னும் மோசமான முடிவுக்கு வருகின்றனர். அதற்காகவே நாளை அந்திபட ஆலமரத்தடிக்கு வரும்படி கூறுகின்றான். கதீஜாவும் காதலனை விட்டுப்பிரிந்து வீடு செல்கின்றாள். வீட்டில் தன் தாய் தன்னை எதிர் பார்த்திருக்கிறாள் என்பதை அறிந்ததும் தன் வாழ்கையின் முடிவு நெருங்கி வருகின்றது என்பதை நேரடியாக சொன்னால் தனக்கு முன்னே தாய்



இறந்திடுவாள் என எண்ணி கனவு கண்டதாக தன் எண்ணக், கருத்தை தாய்க்கு எடுத்துக் கூறுவதை கவி மூலம்....

199. நேற்று பகல்
நித்திரையில் இருக்கையில்
கனவொன்று கண்டேனும்மா
கடுங்கனவோ நானறியேன்

200. இரவில் கண்ட கனவென்றால்
அதை நம்பி கேட்டிடுவேன்
பகலில் கண்ட கனவு
பலிக்காது ஒரு நாளும்

201. எண்ணம் கவலை
எல்லாருக்கும் உள்ளது தான்
பால் பயற்றங்கிளியே
படுத்துறங்கு கண்மணியே

202. உன்னை தனியே விட்டு
ஓடிடுவேன் சீக்கிரமாய்
என்னை நினைத்து எள்ளளவும்
ஏங்கி மனம் சலியாதே

203 என்னைத் தனியே விட்டு
எங்கே மகள் போகரிக்காய்
எண்ணியுள்ள எண்ணத்தை
சொல்லி விடு என்னிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

204. என்னைப் பெற்றெடுத்து
பெருமையுடன் பேரும் வைத்து
அன்பாய் வளர்த்த உம்மா
நான் சொல்லுவேனா உன்னிடம்

205. என்ட தங்க மகளே நீ
தனியே போனியென்றால்
கள்ளன் கடப்படிகள்
கண்டால் விடமாட்டார்களே

206. கள்ளன் கடப்படிக்கு
கடுகளவும் பயமில்லை
உன்னை விட்டுப் போறதென்றால்
உருகுதுகா என் மனது

207 பத்து மாதம் சுமந்து
பாரினில் ஈன்றெடுத்த
தாயாரை விட்டு நீ
தனித்திடாதே கண்மணியே

208. வானத்து வெள்ளி மங்காமல்
பூத்தது போல் என்ட
சீனத்துச் செப்பே உம்மா நீ
சொல்வதெல்லாம் புத்திதான்



209. கொண்டை பெருக்கவில்லை
கொடுப்புப் பல் முளைக்கவில்லை
தாய்ச் சோட்டை தீராமல்
தனியே நீ போயிராதே

210. தனியே போவதென்று உம்மா
சஞ்சலங்கள் கொள்ளாதே
மாமி மகன் மச்சானும்
வருவார் என்னுடனே

211. மாமி மகன் மச்சானுடன்
மறுவூருக்கு போனியென்றாள்
தாயை விட்டோடிய
சண்டாளியென்ற பெயர் வருமே

212. நான் உயிரோடிருந்தால்
ஒரு நாளும் கேளேன் அதை
செத்த பிறகு சொன்னால்
கேளாதும்மா ஒரு நாளும்

215. அந்த இந்த எண்ணமெல்லாம்
அடிக்கடி நீ எண்ணி
அழுது குளறாமல் போய்
படுத்துறங்கு கண்மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாயுடன் பேசிக்கொண்டிருந்த கதீஜா நித்திரை செய்வது போல் பாசாங்கு செய்யவே கதீஜாவின் தாய் தன் மகள் நித்திரை செய்கிறாளென எண்ணி அவளும் படுக்கைக்குப் போய்விடவே கதீஜா தன் காதலர் வரச் சொன்ன இடத்துக்குப் போகிறாள். சிறிது நேரம் தாமதித்து விட்டமைக்கு மன்னிப்புக் கேட்கிறாள்.

214. என்ட தாயார் படுக்க
தாமதமாய்ப் போனதினால்
சொன்னபடி வருவதற்கு மச்சான்
சுணங்கி விட்டேன் கோபமா

215. கட்டியணைத்து
கன்னத்தில் முத்தமிட்டு
கொஞ்சி மகிழ மச்சான்
கொடுத்து வைக்க வில்லையோ

216. கிட்ட இருந்து
கிளி போல கதை கேட்டு
இன்புற்றிருக்க மச்சான்
என்ன பாவம் செய்தேனோ

217. யாருமறியாமல்
அசலூருக்குப் போனால்
சந்தோசமாய் மச்சி நாம்
சதிபதியாய் இருக்கலாமே



218. ஊரை விட்டு வேறூருக்கு
ஓடித்தான் போனாலும்
ஒன்றாய் இருக்க மச்சான்
உதவி செய்வார் யாருமில்லை

எமது சொந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு போனாலும் நம்மை யார்தான் ஆதரிப்பார். ஆறுதல் கூற யாருமில்லை. கேலியும் கிண்டலும் செய்வார்களே தவிர எம்மை யாரும் போற்றமாட்டார்கள் இந்நிலையில் இப்பொய் உலகை விட்டு மெய்யுலகிற்குப் போய் விடுவோம்....

219. பொய்யுலகை விட்டு நாம்
மெய்யுலகம் போனோமென்றால்
வல்ல இறைவன் எம்மை
முகம் பார்த்து ஒன்று சேர்ப்பான்

220. ஊரும் ஒடுங்கி
ஒரு சாமம் ஆகிப்போச்சு
இன்னேரம் மச்சான் என்னை
ஏன் வரச் சொன்னீங்க

221. நான் நஞ்சு குடித்து
நாசமாய் போகிறதை
பார்த்திருந்து மச்சி
மனம் பதறாமல் போய் விடுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

222. மருந்து குடித்து நீங்கள்
மாழுவதை நான் பார்க்க
சந்தோஷமாய் மச்சான்
என்ன சதிமானம் செய்தேனோ

223. பத்து வருடம் உன்னை
பாராச்சிறையாக்கி உன்
வாழ்வை கெடுத்து விட்டேன்
இனியும் என்னை நம்பிடாதே

224. என்னை தனியே விட்டு
எங்கேயும் போனியென்றால்
கட்டாயம் நான் கயிறு
போட்டுத்தூங்கிடுவேன்

225. நான் உயிரோடிருந்தால்
ஒரு நாளும் வாழ மாட்டாய்
இறந்து மடிந்தால் நீ
இருப்பாய் சந்தோஷமாய்

226. உன்னைப் போல் கணவர்
ஒரு போதும் வாய்க்கமாட்டார்
கண்ணான மச்சான் என்னை
கை விட்டுப்போயிடாதே



இருவரும் ஒருவருக்கொருவர் மனமொருமித்து ஒன்றுபட்டு பத்து வருடங்கள் கடந்து விட்டது. எனினும் எதுவித உடல் தொடர்பில்லாது உள்ளத் தொடர்புடனேயே காலம் கடந்து விட்டது. இதையெல்லாம் எண்ணிய பொழுது இதயத்தின் வேதனையை எப்படித்தான் அடக்குவதோ கவிதையில்...

227. பத்து வருடம் பாரச்
சிறையாக்கி
ஆசையைத் தீர்க்காமல்
அடங்குமோ நமதீறல்

228. தேவடியாள் என்று
தெருவெல்லாம் பேர் கேட்டு
அலைந்து திரிந்தாலும் மச்சான் உன்
ஆசையைத் தீர்த்து விடு

பத்து வருடம் பக்குவமாய் வளர்ந்த காதல் ஆசாபாசங்களுக்கு அடிமையாகி வெறும் ஊடலில்லாமல் ஊர் அறிய உலகறிய கணவன் மனைவியாகி இருவரும் ஒன்று சேர்ந்து நமது புனித வாழ்க்கையை ஆரம்பிக்கலாமென எண்ணினோம் முடியவில்லை. காதல் கைகூடவில்லை. இன்று எமது கடைசி சந்திப்பு. இனி மேல் இவ்வுலகில் மீண்டும் சந்திக்கப் போவதில்லை. நமது வாழ்வு இன்றுடன் முடிகின்றது. இருவரும் கணவன் மனைவியாய் இருந்து விடியுமுன் இம்மண்ணுக்கு இரையாவோம்.இதனை.

229. ஆசையெல்லாம் தீர்த்து
அன்பாக நாமிருந்து
விடியுமுன் சாவதற்கு மச்சி
சம்மதமென்றால் சொல்லுமகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230. அழுது குளறி அவதிப்பட்டு
திரியாமல்
சாவதற்கு மச்சான் நான்
சந்தோஷமாய் வாறன்

இரவோடிரவாக இருவரும் ஒருவராக இணைந்த தம் புனித காதலுக்காக தம்முயிரை அர்ப்பணித்து தியாகத்தின் சின்னமாய் பொய்யுலகை விட்டு மெய்யுலகிற்கு சென்றனர்.

**வாழ்க... கதிஜா காசிம் ஆன்மா சாந்தியடையட்டும்.**

**முற்றும்**





## இஸ்லாமிய தமிழ் இல்கிய வடிவம்

ஆக்கம் : **ஷெய்ஹ் கலாபூசணம் ஜமால்டீன் பாவா (கலீபா)**

அஹதினில் உஹதாய் வந்து
அருள் மழை பொழிந்து நின்ற
அருமையாம் அப்துல்லாஹ்வின்
அண்ணல் முஹம்மதுவே - 2

உதிரம் சொரிந்த மக்கா
உத்தம பூமி தன்னில்
உலகோன் நபியின் அன்பால்
உம்மத்தாய் ஆனார் மக்கள்
உரிமை விரும்பும் பெண்கள்
உளமதில் கலிமா வின்று
உம்மி நபியுமான
உண்மை முஹம்மதுவே - (அஹ)

கனிமொழி பாத்திமாவின்
கல்பில் கருணை உள்ள
மணிமொழி கூறும் எங்கள்
மகத்துவம் ஆனவரே
இனிய மொழியாலே இந்த
இரு நிலம் தன்னில் வாழ
தனி மொழி கூறும் எங்கள்
தாஹா முஹம்மதுவே

இறை வழி தன்னில் அன்று
மறை மொழி ஒன்று என்று
நிறை ஒளி வீச ஹிறா
குகைதனில் வாழ்ந்தார் சென்று
குறைவின்றி தொழுகை நோன்பு
ஹஜ்ஜையும் பூண்டார் சென்று
தரைமீது தஞ்சம் என்று
எதிரியை ஏத்தார் நின்று.

PRADESHIYA SABHA 07 AUG 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஸாலா

கேழும் மன்னா மன்னவரே
கிருபையுள்ள ஓர் மஸாலா
சூழ்ந்திருக்கும் சபை தனிலே
சொல்லிடுவீர் இதன் பொருளை
கருவுக்கு முன் கருவுமென்ன
உயிருக்கு முன் உயிருமென்ன
இந்த நல்ல கேள்வியைத்தான்
இயம்பிடுவீர் இச்சபையில்

ஆனாலும் கேழும் பெண்ணே
அழகுடனே அதன் பொருளை
சபையோர் அறியும்படி
சாத்துகின்றேன் இப்பொழுது
கருவுக்கு முன் கருவானது
காயமான மண்ணாகும் பெண்ணே
உயிருக்கு முன் உயிரானது காற்றாகும்
ஞான கண்ணே
இது பெரிய கேள்வி அல்ல
இதற்கு மேலாய் கேழும் பெண்ணே

தங்கியிருப்பு எங்கே மன்னா
தரித்திருப்பு எங்கே சொல்வீர்
ஊண்டிருப்பு எங்கே மன்னா
உகந்திருப்பு எங்கே சொல்வீர்
அல்லாஹ் படைத்த நாள் முதலாய்
எங்கிருந்து எங்க வந்தீர்
இதற்கு பதிலைச் சொன்னால்
இயம்பிடுவேன் வீரர் என்று

ஆனாலும் கேழும் பெண்ணே
அழகுடனே இதற்குப் பொருள்
அறிஞர்கள் அறியும்படி
அதனைக் கேள் பெண்மயிலே
தங்கியிருப்பு கரு ஊரில்
தரித்திருப்பு தகப்பன் மூளை
ஊண்டிருப்பு கும்பி குளம்



உகந்திருப்பு உன் சமுகம்
அல்லாஹ் படைத்த நாள் முதலாய்
அங்கிருந்து இங்கு வந்தேன்
இதுதானே உன் மஸாலா
இதற்கு மேலாய் சொல்லும் பெண்ணே

ஆனாலும் கேழும் மன்னா
அருமையுடன் ஓர் மஸாலா
நெற்றி படாத் தொழுகை என்ன
நேரம் இல்லா பாங்குமென்ன
கத்தி படா கறியும் என்ன
கருத்துடனே பதிலைச் சொல்வீர்

அருளக் கேழும் உன் மஸாலா
அருமையுள்ள பெண் மயிலே
சங்கையுள்ள உன் மஸாலா
சாத்துகின்றேன் இச்சபையில்
நெற்றி படாத் தெழுகை அது
மையத்துத் தொழுகையாகும்
நேரமில்லா பாங்கானது
பாலகன் பிறந்தவுடன் இஹாமத்து பாங்கு சொல்வதாகும்
கத்தி படா கறியானது
பறவையிடும் முட்டையாகும்
இதுதானே உன் மஸாலா
இதற்கு மேலாய் கேழும் பெண்ணே

ஆனாலும் கேழும் மன்னா
அருளுகிறேன் ஓர் மஸாலா
இதன் மஸாலா பொருளை சொன்னால்
குலத்தில் குமரன் என்பேன்
ஒன்று இருக்கு இரண்டு இல்லை
இரண்டு இருக்கு மூன்று இல்லை
மூன்று இருக்கு நான்கு இல்லை
நான்கு இருக்கு ஐந்து இல்லை
ஐந்து இருக்கு ஆறு இல்லை
ஆறு இருக்கு ஏழு இல்லை
ஏழு இருக்கு எட்டு இல்லை
எட்டு இருக்கு ஒன்பது இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது இருக்கு பத்து இல்லை
பத்து இருக்கு பதினொன்று இல்லை
பாரோர்கள் அறியும்படி
பகர்ந்திடுவீர் இதன் பொருளை

இந்தச் செய்தி கேட்டவுடன்
இயம்புகின்றார் அரசருமே
ஆனாலும் கேளும் பெண்ணே
அன்புடனே உரைத்திடுவேன்
இதற்கு பொருள் தெரியாவிட்டால்
உன்னைத் தேடி நான் வரவே மாட்டேன்
உன்னுடைய கேள்விக்கு நான் உரைத்து வாரேன்
பதில் அதனை

ஒன்று இருக்கு இரண்டு இல்லை
அல்லாஹ் ஒருவனாகும்
இரண்டு இருக்கு மூன்று இல்லை
உலகத்தில் ஆணும் பெண்ணும் இரண்டேதான்
மூன்று இல்லை
மூன்று இருக்கு நான்கு இல்லை
இஸ்லாமிய சட்டப்படி மூன்று தரம் தலாக் சொல்வதாகும்
நான்கு இருக்கு ஐந்து இல்லை
நான்காவது வேதம் ஐந்தில்லை
ஐந்து இருக்கு ஆறு இல்லை
ஐந்துதான் கலிமா ஆறு இல்லை
ஆறு இருக்கு ஏழு இல்லை
அதாவது ஈமானின் பர்ழு ஆறு ஆகும் ஏழு இல்லை
ஏழு இருக்கு எட்டு இல்லை
ஏழு நரகம் எட்டு இல்லை
எட்டு இருக்கு ஒன்பது இல்லை
எட்டுத்தான் சொர்க்கம் ஒன்பது இல்லை
ஒன்பது இருக்கு பத்து இல்லை
உடலுக்கு ஒன்பது துவாரம் பத்து இல்லை
பத்து இருக்கு பதினொன்று இல்லை
பத்து மாதம் ஆனதும் ஒரு பெண்
பிள்ளையைப் பெற்று விடுவார்
இதுதானே உன் மஸாலா
இயம்பி வந்தேன் ஞானக் கண்ணே!



## தனிப்பாடல்கள்

01. காத்தான்குடியிலிருந்து
கன்னி நாகு வருகுதென்று
கண்ணி குத்திக் காத்திருக்கேன்
கண்ட பலன் ஒன்றுமில்லை

02. கட்டிலிலே நீ இருக்க
கதவோரம் நானிருக்கேன்
புட்டுப பிங்கான் கீழிருக்கு
பிசைந்து தின்போம் வாங்க மச்சான்

03. வாழைப் பழத்தாருக்கும்
வாப்பாவுக்கும் சொல்லிடுங்கோ
சீனிவெள்ளை நாகு
சீரழிந்து போகுதென்று

04. இந்த மழைக்கும்
இனிவாற கூதலுக்கும்
சொந்தப் புருஷனென்றால்
சுணங்குவாரோ உம்மாரியில்

05. மீராவளர்த் பூனை
மீன் குடல் தின்ற பூனை
நாளைக்கும் வா பூனை
நல்ல குடல் தந்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. புல்லுப் புடுங்கியிருக்கு
புறவளவு தூத்திருக்கு
எள்ளுப் பொரித்திருக்கு எங்கட
இளைய மச்சான் வாறதெப்போ

07. ஆழிக்கிணறு என்று
அள்ளியெடுக்கப் போனேன்
கரை ஏறி வந்த எனக்கு
கால் கழுவ தண்ணீரில்லை

08. தோட்டுப் பாய் சுமந்து செல்லும்
தோகை மயிலாளிடம்
கேட்டுப் பார் அண்ணே நம்மட
கிறு கிறுப்பு தீருமோவென்று

09. காவல் பரணில்
கண்ணுறங்கும் வேளையிலே
கண்ணான மச்சி வந்து
காலூன்றக் கனவு கண்டேன்

10. தண்ணீர் குடமெடுத்து
தனிவழியே போறபெண்ணே
தண்ணீர் குடத்தினுள்ளே
தளம்புதடி என் மனசு



## தாலாட்டுப் பாடல்

அல்ஹம்துலில்லாஹி ஆலத்தைப் படைத்தவனே
குல்லும் நிறைந்த ஹூதாவே உன் காவல்

தாயார் வளியோ தகப்பனார் வம்மிசமோ
ஆதம் நபியின் அடிச்சுவடே - கண்ணுறங்கு

பத்துமாதம் பாரச்சுமையை
பாரெல்லாம் சுமந்து பெற்றபாலகனே - கண்ணுறங்கு

பத்துமாதம் சுமந்த பாரமெல்லாம் குறைய
தலைப்பிள்ளை எனக்கு தந்ததொரு பாக்கியந்தான் - கண்ணுறங்கு

பசித்தழுதாய் நீ மகனே பால் சுமைக்கு நானழுதேன்
பாரம் குறைந்தது என்னுடம்பு பசி தணிந்தது உன்னுடம்பு - கண்ணுறங்கு

சற்றுப் பொறுத்தாலும் சட்டையைப் பிடித்திழுப்பாய்
சடுதியிலே தந்திடுவேன் தாய்ப்பால் உண்டு மகிழ - கண்ணுறங்கு

தாய்ப்பாலூட்ட மகனே தன் பசிக்கு பாலூட்ட
காலைத் தட்டி கதறியழுவாய் கடுகதியில் வந்திடுவேன் - கண்ணுறங்கு

அண்ணலார் எம் நபிக்கு ஹலிமாதான் பாலூட்டி
அரவணைத்த கதை அறிவாயோ கண்மணியே - கண்ணுறங்கு

என்னைக் கண்டால் கண் சிமிட்டும் உன் சிரிப்பு
கால்களிலே ஒரு துடிதுடிப்பு காரணத்தைச் சொல் கிளியே - கண்ணுறங்கு

பத்துமாதம் சுமந்து பாரச் சுமையிறக்க
அல்லாஹ் எனக்களித்த அருட் கொடைதான் - கண்ணுறங்கு

தங்கக் கலமெடுத்து சாதிலிங்க மையிட்டு
பள்ளிக்குப் போறதை மகனே பார்ப்பதென்னாளோ - கண்ணுறங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னத்து கடமையை சிறப்புடன் நிறைவேற்றி
பள்ளிக்குப் போய் வாறதை பார்க்கவெகு ஆசையுண்டு - கண்ணுறங்கு

கல்யாணம் முடித்து கனகாலம் காத்திருந்து
பெற்றெடுத்த பெருமையுடன் பெரு மகிழ்வடைந்தேன் - கண்ணுறங்கு

அல்ஹம்துலில்லாஹி ஆலம் படைத்தவனே
பூலோக மாந்தர் மகனை போற்றிட வைப்பாய் ரகுமானே - கண்ணுறங்கு

குர்ஆனை ஓதி கிதாபுகளையும் பாடமாக்கி
ஆலிமாய் ஆக்கி வைப்பாய் ரகுமானே - கண்ணுறங்கு


தனிக்காட்டில் ஒரு தனி மரமாய் நின்றழுதேன்
தந்தாய் எனக்கொரு மகனை தழைத்தோங்க கிருபை செய்வாய்
- கண்ணுறங்கு

பார்த்தால் பசிதீரும் உன் முகத்தை
பசித்தால் அழுதிடுவாய் கண்மணி - கண்ணுறங்கு

பட்டத்து யானை பவனி வருவதுபோல்
மக்கள் சோபனம் சொல்லி கூட்டி வருவதென்னாளோ - கண்ணுறங்கு

அலியார் பலமும் அபூபக்கரின் தானமும்
உமரின் உறுதியும் உன்னில் வளர வேண்டும் - கண்ணுறங்கு

அல்ஹம்துலில்லாஹி ஆலம் படைத்தவனே
கண்ணின் மணியைக் காத்தருள்வாய் - கண்ணுறங்கு





## தென்கிழக்குப் பகுதிகளில் பேசப்படும் மரபுச் சொற்கள்

பொலி - நெல்
பொலிக்கொடி - வைக்கோல்
அரக்கு - சூட்டின் நடுப்பகுதி
கணக்கன் - மரைக்கால் (நெல் அளப்பதற்குப் பாவிப்பது)
வாலா - மண்வெட்டி
கைப்பொட்டி - பிரம்பினால் பின்னப்பட்ட சிறு பெட்டி
கடகம் - பெரிய பெட்டி
வேலைக்காரன் - சூடடிக்கும்போது கிளறி விடும் தடி
படங்கு - சூடடிப்பதற்கு பயன்படும் சாக்குகளினால் செய்யப்பட்ட பெரிய விரிப்பு
புரை - வயல்களில் இருக்கும் நிரந்தரமான தங்குமிடம்
பரண் - உயரத்தில் அமைக்கப்பட்ட தற்காலிகமான தங்குமிடம்
கட்டைமாறு - நெல்லைக் குவிப்பதற்குப் பாவிப்பது
வக்கடை - நீர் பாய்ச்சுவதற்கான வழி
தேமாறு - மேலதிக நீர் வடிவதற்கான வழி
புட்டி - வயலிலுள்ள உயரமான பகுதி
அத்தாங்கு - மீன் பிடிப்பதற்கான சிறு வலை
கரப்பு - மீன் பிடிப்பதற்கான கூடு
தாகத்தி - வேளாண்மை அறுவடை செய்யும் கத்தி
சூடு - அறுவடை செய்த வேளாண்மைக் குவியல்
களவெட்டி - சூடடிக்கும் பகுதி
ஏத்து - நீர் இறைக்க பயன்படும் மரத்தாலான மூடியற்ற நீண்ட பெட்டி
முக்காலி - ஏத்தைக் கட்டுவதற்குரிய மூன்று காலுடைய உயரம்
கடவாய் - பெட்டி
பதக்கடை - அரிசி இல்லாத வெறும் நெல் (பதர்)
உப்பட்டி - அறுவடை செய்த கதிர்கள்
கட்டு - பல உப்பட்டிகளை ஒன்று சேர்த்துக் கட்டியவை
கோணி - சாக்குப் பை
கோணி. ஊசி - சாக்குத் தைக்கும் ஊசி
அட்டுவம் - நெல் சேமிக்க வீட்டுக்கு வெளியே வைக்கோலினால் கட்டிவைக்கும் நெற்களஞ்சியம்
பட்டறை - வீட்டினுள் நெல்லைச் சேமிக்கும் பெரிய சாக்குப் பை
பூவல் - வயலில் தண்ணீர் பெறும் குழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொட்டு - கிணறு கட்டுவதற்கான குளாய்
தலைமாடு - தலைப்பக்கம்
கால்மாடு - கால்பக்கம்
கொமுக்கு - ஜக் (Cup)
தோட்டுப்பாய் - முழுப்பன்னினால் இழைக்கப்படும் பெரிய பாய்
கிறுக்கு - சுற்று
வெட்டு - திருப்பு
உமல் - பன்னினால் இழைக்கப்பட்ட பை
அடுப்படி - குசினி
வட்டா - வெற்றிலைத் தட்டு
படிக்கம் - வெற்றிலை மெல்லுபவர்கள் எச்சில் துப்பும் பாத்திரம்
கிள்ளவடு - சுண்ணாம்பு வைக்கும் பாத்திரம்
சேவரக்கால் - செம்பினாலான இருக்கை
திருவலை - தேங்காய் துருவும் கருவி
அருவமனை - மீன், இறைச்சி அரியும் கருவி
சுண்டுகொத்து - அளக்கும் பாத்திரம்
அலமூடி - சிறுமிகளுக்கு இடுப்பில் கட்டும் மறைப்பு
அல்லுக்குத்து - காதணி
காறை - சிறு ஆண்பிள்ளைகள் கழுத்தில் அணிவது
அறனாக்கொடி - இருப்பில் கட்டும் நூல்
சோமன் - சேலை
சிறுவால் - கால் சட்டை
துலா, திலாந்து- கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ள உபயோகிக்கும் பொறி
துலாக்கால் - துலாவை தாங்கி நிற்கும் கால்
பட்டை - துலாவினால் தண்ணீர் அள்ளுவதற்கு பயன்படும் கம்பி, கயிறு
கொக்கை - மரத்தில் இலை, குழை, காய் பறிக்க உபயோகிப்பது (துரட்டி)
முல்லைக்காரன்- மேற்பார்வையாளர்
வெளியான் - வயல்காரன்
வார்வகட்டு - துடைப்பம்
ராக்கை - குசினியில் சாமான்களை அடுக்கி வைக்கப் பயன்படுவது
சீமாடு - பாரம் தூக்கும்போது தலையில் வைப்பது
போக்கு - கான்
வெட்டயில் - வெளியில்



வாழ்த்துகிறோம்

கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்
என்னும் கலை கலாச்சார நூலை வெளியிடும்
அல்-ஹாஜ் - எம். வை. உதுமான் சாஹிபு
[ஓய்வு பெற்ற அதிபர்]
அவர்களின் முயற்சியை பாராட்டுகின்றோம்.
- நிர்வாகம் -

லக்கி ஹவுஸ் எலக்ற்றிக்கல்
பிரதான வீதி, அக்கரைப்பற்று - 01.



எம்மிடம் :
- சகல விதமான குளியலறைப் பொருட்கள்
- பலவிதமான தரை ஓடுகள்
- வீட்டுக்குத் தேவையான மின்சாரப் பொருட்கள்
- நீர் இறைக்கும் மோட்டர்கள், நீர் விநியோக குழாய்கள் போன்றவற்றை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

LUCKY HOUSE ELECTRICAL
Main Street, Akkaraippattu - 01.
Tel : 067 2279158 GSM : 0777679698




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள்

கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்
என்னும் பண்பாட்டு நூலை வெளியிடும்
அல்-ஹாஜ். எம். வை. உதுமான் சாஹிபு
(ஓய்வு பெற்ற அதிபர்)
அவர்களின் முயற்சியை பாராட்டுகின்றோம்.

ஆர். எம். கெமிக்கல்ஸ்

அம்பாறை வீதி, அக்கரைப்பற்று - 06
தொலைபேசி : 0602675866 0773138068



எம்மிடம் :
உங்களுக்குத் தேவையான விவசாய இரசாயனப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

RM
Chemicals

R.M. Chemicals

AMPARA ROAD, AKKARAIPPATTU - 06.
CDMA : 060 2675866, GSM : 0773138068




நல் வாழ்த்துக்கள்

கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்
என்னும் கலை, கலாச்சார, பண்பாட்டு நூலை வெளியிடும்
அல்-ஹாஜ். எம். வை. உதுமான் சாஹிபு
(ஓய்வு பெற்ற அதிபர்)
அவர்களின் முயற்சியை பாராட்டுவதில்
மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

றசீன் பிறதர்ஸ் கலர்பேங்

பிரதான வீதி, அக்கரைப்பற்று - 01
தொலைபேசி : 0672277292



எம்மிடம் :
- சகல விதமான தீந்தை வகைகள்
- நீர் பம்பிகள்
- நீர் பம்பிகளின் உதிரிப்பாகங்கள்

போன்றவற்றை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

RAZEEN BROTHERS COLOUR BANK
Main Road, Akkaraippattu - 02.
Tel : 067 2277292



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


CLASS NO:
13444



வாழ்த்துகிறோம்

கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்
என்னும் கலை. கலாச்சார. பண்பாட்டு நூலை வெளியிடும்
அல்-ஹாஜ். எம். வை. உதுமான் சாஹிபு
(ஓய்வு பெற்ற அதிபர்)
அவர்களை பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

# ஜீஸா டைல்ஸ் சென்ரர் அன்ட் ஹாட்வெயார்

**55ஏ, பி.எம்.சி. வீதி, அக்கரைப்பற்று - 02.**
தொலைபேசி : 067 2277461






எம்மிடம் :
- சகல விதமான குளியலறைப் பொருட்கள்
- பலவிதமான தரை ஓடுகள்
- வீட்டுக்குத் தேவையான மின்சாரப் பொருட்கள்
- நீர் இறைக்கும் மோட்டர்கள், நீர் விநியோக குழாய்கள்
போன்றவற்றை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

***JEEZA TILES CENTRE & HARDWARE***
**55 A, B.M.C. Road, Akkaraippattu - 02.**
**Tel : 067 2277461**




PRADESHIYA SABHA
07 AUG 2007
AKKARAIPATTU



சாய்ந்தமருதூரை பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்றை வசிப்பிடமாகவும் இலக்கியத் துறையில் மிகவும் ஆர்வம் கொண்டவருமான அல்-ஹாஜ் M.Y. உதுமான் சாஹிப் அவர்கள் எனக்கு நீண்ட நாள் பழக்கமுடையவராகும். அத்துடன் ஒருவகையில் எனக்கு மாமன் முறையுமாவார். 1932-05-10ஆம் திகதி இப்புவியில் அவதரித்து ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை தர்ஹா நகர் அல்-ஹம்றா மகாவித்தியாலத்திலும் பயின்று பரீட்சையில் திறமைச் சித்தியடைந்து 1956-07-02ஆம் திகதி தனது ஆசிரியத் தொழிலை கொழும்பு-02 அல்-இக்பால் மகா வித்தியாலயத்தில் தொடங்கினார். பின்பு 1965ஆம் ஆண்டு அதிபர் பதவி உயர்வு பெற்று இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றியவராவார். இவர் கடமையாற்றிய ஊர்களிலெல்லாம் தன்னாலான சமூகப் பணிகளைச் செய்துள்ளார்.

இவர் 1961-07-15ஆம் திகதி அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட M.A. சாதுனாஉம்மா அவர்களைத் திருமணம் முடித்து நான்கு பெண் மக்களுக்கும் ஒரு ஆண் மகனுக்கும் தந்தையானார். தனது நான்கு பெண் மக்களுக்கும் நல்ல திருமண வாழ்க்கையை அமைத்துக் கொடுத்துள்ள உதுமான் சாஹிப் அவர்கள் 1987ஆம் ஆண்டு அதிபர் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றார்கள்.

இவர் இலக்கியத்துறையில் ஆர்வமுள்ளவராக இருந்தமையினால் வானொலி நிகழ்ச்சியின் 'கிராமிய சஞ்சிகை' எனும் நிகழ்ச்சியில் 13 அதிகாரம் கொண்ட கவிதைத் தொகுப்பை வழங்கினார். கடந்த 40 வருடங்களாக தனது அயராத முயற்சியின் பலனாக இந்நூலை உருவாக்கி அதைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி இப்போது நூல் உருவில் வெளியிட்டுள்ளார். இந்நூல் இலக்கியத் துறையைச் சார்ந்த அனைவருக்கும் மிகவும் பிரயோசனமளிக்குமென நம்புகின்றேன். இத்துடன் நில்லாது ஏறக்குறைய 8000 பழமொழிகள் கொண்ட தொகுப்பொன்றையும் விரைவில் வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள அவருக்கு நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையும் பொருளாதார விருத்தியை கொடுக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**அல்-ஹாஜ். எம். ஐ. ஹதியதுல்லாஹ்**
**சாய்ந்தமருது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org